Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்

FedEx. Express

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

THIRUMURUGAN COM NET

Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com

பலநோக்கு கூ.ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7560
Fax:021 222 7310



மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 08 (27.07.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:298




கிளிநொச்சிக்கு நேற்று வந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின் போது..

# இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில்

# பேச்சுக்களுக்கு புலிகள் எப்போதும் தயார்!

## ஹெல்கிசனிடம் புலிகள் மீண்டும் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**இடைக்கால நிர்வாகசபை யோசனையை அடிப்படையாக வைத்து அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டில் எந்தமாற்றமும் இல்லை என்றும் –**

**சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்கவேண்டும் என்ற புலிகளின் நிலைப்பாட்டையும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுக்கு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் பிரதிநிதிகள் குழு நேற்று வலியுறுத்திக் கூறியுள்ளது.**

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை மற்றும் யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாட நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார்.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்திற்கு விமானப் படை ஹெலியில் வந்திறங்கிய விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவில் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் உட்பட தூதரக அதிகாரிகள் பலரும் இடம்பெற்றிருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டாவ சம்பவத்துக்கு அரசாங்கம் கண்டனம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை சுமுகமாக ஆரம்பிப்பதற்கு-

கொட்டாவப் பகுதியில் எட்டுப்பேர் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் சாதகமானதாக இல்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொட்டாவ சம்பவம் தொடர்பாக அரசாங்கத்தின் சார்பில் கண்டனம் தெரிவித்து, அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

கொட்டாவவில் இடம்பெற்ற பயங்கரவாத வன்முறை, போர்நிறுத்த உடன்படிக்கையின் நோக்கத்துக்கும் வாசகத்துக்கும் அமைவாகவில்லை.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை சுமுகமாக ஆரம்பிப்பதற்கு இந்தச் செயல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பாலா - ஹெல்கிசன் வெள்ளியன்று சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை - நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் லண்டனில் சந்தித்துப் பேச்சுநடத்தவுள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் கலந்துகொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நடத்தும் பேச்சுக்களின் விபரம் குறித்து நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசன், கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடம் விளக்கிக்கூறுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சமாதான முயற்சியில் முன்னேற்றம் எதுவுமில்லை மக்கள் இது குறித்து ஏமாற்றம் அடைந்துள்ளனர்!

### ஹெல்கிசனிடம் தமிழ்ச்செல்வன் எடுத்துரைப்பு

(கிளிநொச்சி)

சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பது தான் உண்மையான நிலைப்பாடு. இரண்டுவருடகால சமாதான முயற்சிகளையிட்டு தமிழ்மக்கள் ஏமாற்றமும், நம்பிக்கையீனமும் அடைந்திருக்கிறார்கள் என்பதை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுக்கு எடுத்து விளக்கியுள்ளோம் -

என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் அவர் பேசும்போது மேலும் குறிப்பிட்டதாவது -

இந்தச் சந்திப்பில் முக்கியமாக- பேச்சுக்களைத் தொடர்வது மற்றும் தற்போது ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது, பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது போன்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தம், அமைதி முயற்சிகள் நிரந்தர சமாதானத்துக்கு அவசியம்

### ஹெல்கிசன் கிளிநொச்சியில் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமானால் போர்நிறுத்த உடன்படிக்கையும், சமாதான முயற்சிகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டுமென நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்த பின்னர், இந்தச் சந்திப்பு குறித்து ஊடகவியலாளருக்கு கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

பாதுகாப்பு, பொருளாதாரம் சமாதான பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான அரசினுடைய சாதகமான செய்திகளை எடுத்து வந்துள்ளேன்.

இந்த விடயங்களை விடுதலைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு வெடிவிபத்து; 11 வயதுச் சிறுவன் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஈரலக்குளம் பகுதியில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 11 வயதுச் சிறுவன் பலியானதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறித்த சிறுவன் ஆடு மேய்ப்பதற்காக ஈரலக்குளம் பகுதிக்குச் சென்றவேளை மர்மப் பொருளொன்று கிடப்பதனைக் கண்டு அதனை எடுத்து மரத்துக்கு எறிந்தவேளை அது வெடித்துச் சிதறியதில் சிறுவன் ஸ்தலத்திலேயே பலியானானன்.

ஈரலக்குளம் பகுதியைச் சேர்ந்த அருளானந்தம் புவனேந்திரன் (வயது 11) என்பவனே உயிரிழந்த சிறுவன் ஆவான்.

(12 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# வவுனியா நகரில் காணாமல் போன லொறி கல்வியங்காட்டில் பொலிஸாரிடம் சிக்கியது!

கடந்த வருடம் வவுனியாவில் காணாமற்போன லொறி நேற்று யாழ்.பொலிஸாரால் கல்வியங்காட்டுப் பகுதியில் வைத்து கைப்பற்றப் பட்டது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

கடந்த வருடம் வவுனியா தோணிக்கல் பிரதேசத்தைச் சேர்ந்த வி.குமாரவேல் என்பவரது லொறியை அயலவர் ஒருவர் வாடகைக்கு அமர்த்தி, அதனை அவரே செலுத்தியும் சென்றுள்ளார்.

அவ்வாறு லொறியைச் செலுத்தி வந்த நபர் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒருவருக்கு லொறியை சுமாரான ஓர் விலைக்கு விற்றுவிட்டு தலைமறைவாகியுள்ளார்.

லொறியை இழந்தவர் லொறியைக் கொண்டு சென்றவரின் வீட்டிற்குப் பல தடவை சென்று விசாரித்த போதும், அவரை கண்டு பிடிக்க முடியவில்லை. அதனால், வவுனியாவில் பொலிஸாரிடம் முறையிட்ட லொறி உரிமையாளர், பின்னர் தனது லொறியைத் தேடும் முயற்சியில் தானே ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் - அவரது லொறி யாழ்ப்பாணத்தில் நிற்பதைக் கண்டதாக சிலர் கூறியதையடுத்து அவர் யாழ்ப்பாணம் வந்து யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்ததுடன், தானும் தேடிவந்துள்ளார்.

இந்த நிலையில் - யாழ்.கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள கராஜ் ஒன்றில் பாகங்கள் மாற்றப்படுவதற்காக லொறி நிற்பதைக் கண்டறிந்த யாழ்.பொலிஸார் அதனை மடக்கிப் பிடித்துள்ளார்கள்.

லொறியை யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ள பொலிஸார் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செயவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். (ப)

## தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட மாநாடு பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பேரவை செயலாளர் சூ. சிறில் தலைமையில் நடைபெறும். இந்த மாநாட்டில் அனைத்துப் பிரதேச கோட்ட, மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், பேரவையின் ஆலோசகர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தேசிய எழுச்சிப் பேரவை அறிவித்துள்ளது.

# பருத்தித்துறை கோட்ட பாடசாலைகளின் தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

(ஆழியவளை)

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு :

### பேச்சு - பிரிவு - I

முதலாம் இடம் - சி.மயூரி (தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை).

இரண்டாம் இடம் - க.கலையரசி (துன்னாலை மேற்கு மெ.மி.த.க.).

மூன்றாம் இடம் - ம.ஆன்வின் சலா (தும்பளை சிவப்பிரகாச ம.வி).

### பிரிவு - II

முதலாம் இடம் - ஜெ.சுலக்சன் (தொண்டைமானாறு வி.ம.வி).

இரண்டாம் இடம் - க.கிருஷிகா (பொலிகண்டி இ.த.க.பாடசாலை).

மூன்றாம் இடம் - கி.மகாராஜ் (ஹாடலி கல்லூரி).

### பிரிவு - III

முதலாம் இடம் - பா.மதுரா (மெதடிஸ்த பெ.உ.பாடசாலை).

இரண்டாம் இடம் - ந.நிருஷ்ணி (வட.இந்து மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - ஞா.அபிராம் (ஹாட்லிக் கல்லூரி)

### பிரிவு - IV

முதலாம் இடம் - வ.பிரகீத் (தும்பளை சிவப்பிரகாச ம.வி).

இரண்டாம் இடம் - ச.கார்த்திகா (மெ.பெ.உ.பாடசாலை).

மூன்றாம் இடம் - ப.சுமதா (தொண்டைமானாறு வி.ம.வி).

### பிரிவு - V

முதலாம் இடம் - செ.செல்வரஞ்சினி (மெதடிஸ்த பெ.உ.பாடசாலை).

இரண்டாம் இடம் - ஜெ.டயானா (வட.இந்து மகளிர் கல்லூரி).

### பாவோதல் - பிரிவு - I

முதலாம் இடம் - இ.நிதர்சினி (தொண்டைமானாறு வீ.ம.வி).

இரண்டாம் இடம் - கி.சிவதர்சிகா (வட.இந்து மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - சு.நிஷாமினி (பொலிகண்டி இ.த.க.பாடசாலை).

### பிரிவு - II

முதலாம் இடம் - பி.நிவேதிகா (தொண்டைமானாறு வீ.ம.வி).

இரண்டாம் இடம் - பொ.ஜெயகௌரி (வட.இந்து மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - க.கலைச்செல்வி (தும்பளை சிவப்பிரகாச ம.வி).

### பிரிவு - III

முதலாம் இடம் - பா.றோகினி (வட. இந்து மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - வி.அனல்டா (பொலிகண்டி இ.த.க.பாடசாலை).

மூன்றாம் இடம் - அ.வசந்தகுமார் (சென்.தோமஸ் றோ.க.பெ.பாடசாலை).

### பிரிவு - IV

முதலாம் இடம் - நோ.சுஜாதா (தும்பளை சிவப்பிரகாச ம.வி).

இரண்டாம் இடம் - இ.நிதர்சன் (ஹாட்லிக் கல்லூரி).

மூன்றாம் இடம் - ப.பாரதி (வட. இந்து மகளிர் கல்லூரி). (122)

(மிகுதி நாளை தொடரும்)

## தாயப்பர் ஆலய வருடாந்த திருவிழா

குடத்தனை பொற்பதி தாயப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திரு நாள் பாடல் கூட்டுத்திருப்பலிப் பூசையினை ஆலயத்தின் பங்குத்தந்தையால் ஒப்புக் கொடுககப்படும். (17)


## நீங்காத நினைவில் ஆண்டு ஒன்று

தோற்றம் 14 ✿ 09 ✿ 1974



தேற்றம் 27 ✿ 07 ✿ 2003

### தியோடர் கிளாறன்ஸ் கோமஸ் (ராஜா)

திரைகடல் ஓடித் திரவியம் தேடச்சென்றீர்
திரையுனை அந்தத் திரைகடலும் தீண்டியதோ
கரைசேர்க்கக் காத்திருந்த தாயாருமுனை
அரைவழியில் போக்கத்தான் பார்த்திருப்பாரோ?

பார்த்து தானே இருந்தோம் கடலில் நீராட
ஆர்ப்பரித்த அலைகள் உனை அள்ளிப்போய்
ஓர் நொடிக் குள்ளாக முடித்து விட்டதையும்
வார்த்தைகள் இல்லை ராஜா சொல்லி அழ...

'ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்
மாண்டவர் திரும்புவரோ' என்பது பழமொழி
ஆண்டொன்று மடிகின்ற இத்தருண முனை
ஆண்டவர் பாதங்களில் வைத்தோம் ராஜா!

என்றும் நினைவு மாறாத
அம்மா, அப்பா, சகோதரர், மாமாக்கள், மாமிமார், அன்ரி, பெரியம்மா, பெரியப்பா, நண்பர்கள், உற்றார், உறவினர்கள்.

92, சப்பல்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2781)


# உப்பு உற்பத்தி நிறுவனம் ஆனையிறவில் இன்று திறப்பு!

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சிறுவர் கல்வி நிதியத்தின் நிதியுதவியுடன், ஆனையிறவில் அமைக்கப்பட்டுள்ள உப்பு உற்பத்தி நிறுவனம் இன்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்று காலை 11 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - ஐக்கிய நாடுகள் சிறுவர் கல்வி நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் சுகாதார அமைச்சின் பிரதிநிதிகள் உட்பட பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆனையிறவில் உற்பத்தியாகும் உப்புக்களைப் பதப்படுத்தி அயடீன் சேர்க்கப்பட்ட பின்னர், பொதி செய்யப்பட்டு சந்தைக்கு விடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அன்பினில் விளைந்த அரங்க ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்ற அரங்கவியல் மாணவர்களின் 'அன்பினில விளைந்த' என்னும் நாடகம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ரதி லக்ஷ்மி மண்டபத்தில் நாளை மாலை 2.30 மணிக்கு ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

கல்லூரி ஆசிரிய கல்வியியலாளர் க.இ.கமலநாதனால் எழுத்துருவாக்கி நெறியாள்கை செய்யப்பட்ட இந்த நாடக அரங்கவியல் - மாணவர்களின் ஆறாவது ஆற்றுகைத் தொடர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.


நிறைஞ்சனாஸ் சங்கானை
எம்.ஜி.ஆர் இரு வேடங்களில், லதா, மஞ்சுளா மற்றும் நம்பியார் நடித்த
நினைத்ததை முடிப்பவன்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) Random Hearts
(சி-2723)

நாகம்ஸ் சன்னாகம்
சிம்பு, ரம்யா, கருணாஸ் மனோரமா நடித்த

குத்து
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று முதல் அர்ஜுன், மீனா, நெப்போலியன், மணிவண்ணன் நடித்த

அன்பு சகோதரன்
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2725)



## கண்ணீர் காணிக்கை



அஹட்லஷ்மி பதிப்பக உரிமையாளரும், கைதடி சைவச் சிறுவர் இல்ல ஸ்தாபகரும், சிறந்த சமய சமூக சேவையாளருமாகிய எங்கள் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய

**குலபதி - கலாநிதி**
**ஆறுமுகம் கந்தையா J.P**

அவர்களின் மறைவு மிகுந்த மனவேதனையை தருகிறது. இவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணீர் காணிக்கையை செலுத்தி ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் இன் வெஸ்மன் லிமிட் புக் சென்ரர், ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ், யாழ்ப்பாணம், நிர்வாக அதிபர், உரிமையாளரும், ஊழியர்களும்.

இல2, சென்லூசியாஸ் வீதி,
கொழும்பு 12,
0112 - 434674

371, டாம் வீதி,
கொழும்பு -12

(சி-2786)



## வரலாறு காணாத மலிவு விற்பனை

COMMERCE STUDENTS' UNION UNIVERSITY OF JAFFNA

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

**காலம் : 2004 ஜூலை 19 முதல் 29 வரை**
**நேரம் : தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)**
**இடம் : யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்.**

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரிகள், கல்வியியல் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

*தொடர்புகளுக்கு:* வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-2764)

# தமிழர் பிரதிநிதிகளான புலிகள் பற்றி எங்கேயும் எப்போதும் நான் பேசுவேன்

## வைகோ உறுதியாகத் தெரிவிப்பு



(பெங்களூர்)

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்தும் ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் பற்றியும், எங்கும் எப்போதும் பேசுவேன் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உறுதிபடத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில் நடந்த உலகத் தமிழர் பேரமைப்பு மாநாட்டில் கலந்து 'கொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர் -

இந்த மாநாடு நடைபெறும் ஜுலை 25 ஆம் நாளுக்கு ஒரு வரலாறு இருக்கிறது. இதே ஜுலை 25 ஆம் திகதியில் 21 வருடங்களுக்கு முன்பு, 1983 ஆம் ஆண்டு சிங்கள இன வெறியர்கள் - வெலிக்கடைச் சிறையில் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்ற தமிழீழ ஆதரவாளர்களை வெட்டிக் கொலை செய்தனர்.

என்னைத் தூக்கிலிட்டால் எனது கண்களை ஒரு தமிழனுக்குப் பொருத்துங்கள். என் கண்களாவது தமிழீழத்தைக் காணட்டும் என்று கூறிய குட்டிமணியின் கண்கள் சப்பாத்துக் கால்களால் நசுக்கப்பட்டன. அவர்களின் நினைவு தினமான இன்று இந்த நிகழ்ச்சியை நடத்தியிருப்பது பொருத்தமானதுதான்.

இந்தக் கூட்டத்தில் நாம் பேசுவதை இந்த மாநில உளவுப் பொலிஸார், தமிழக உளவுப் பொலிஸார் மற்றும் மத்திய உளவுப் பொலிஸார் ஆகியோர் குறிப்பெடுத்துக் கொண்டும், ரேப்பில் பதிவுசெய்து கொண்டும் இருக்கிறார்கள். நாங்கள் ஒன்றும் இங்கு சதித் திட்டம் தீட்டவில்லை. நான் பொடா சட்டத்தில் கைது செய்யப்பட்ட போது, உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுத்தாக்கல் செய்தேன். அந்த மனுவில் ஈழத் தமிழர் பிரச்சினை இப்போது வேறு பரிணாமத்தை அடைந்துள்ளது.

உலக நாடுகள் அனைத்தும் புலிகளை ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுவிட்டன. பிரபாகரன் இலங்கையில் பேட்டி கொடுப்பது இந்தியத் தொலைகாட்சிகளில் ஒலிபரப்பப்படுகிறது. இது குறித்து நான் நாடாளுமன்றத்தில் என்ன பேசினேனோ, அதைத்தான் திருமங்கலம் தெரு வீதியில் பேசினேன். இது தவறா என்று உச்ச நீதிமன்றத்தில் கேட்டேன்.

தவறுதான் என்று தீர்ப்பு வழங்கியிருந்தால் அதை ஏற்று, எத்தனை வருடமானாலும் சிறையில் இருந்திருப்பேன். ஆனால், நீதிமன்றம் விடுதலைப் புலிகள் குறித்து பொதுக் கூட்டங்களில் பேசுவதில் எந்தத் தவறும் இல்லை என்று தீர்ப்பு வழங்கியது. புலிகள் பற்றிப் பேசுவதற்குக் கருத்துச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவன் என்ற முறையில் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள எனக்குத் தகுதியிருக்கிறது.

இப்போது ஈழத் தமிழர்கள் குறித்துத் திருமங்கலத்திலும் பேசலாம், திருவனந்தபுரத்திலும் பேசலாம், சண்டிகாரிலும் பேசலாம்; பெங்களூரிலும் பேசலாம்.

இந்தியாவுடன் இலங்கை ஒரு இராணுவ ஒப்பந்தம் செய்யப்போகின்றது என்று பேசப்படுகின்றது. அது கவலையளிக்கின்றது. அமெரிக்கா - திருகோணமலை மீது கண் வைக்கிறது. அந்தத் திருகோணமலைத் துறைமுகப் பகுதி எண்ணெய் வளம் மிக்க இயற்கைத் துறைமுகமாகும். அந்தத் துறைமுகத்தை எம்மிடம் கொடுத்தால் ஆசியாக் கண்டம் அனைத்தையும் பிடித்துவிடுவேன் என்று நெப்போலியன் கூறினார்.

திருகோணமலை தமிழர்கள் வாழும் இடம். தமிழர்கள் ஆதரவிருந்தால், அங்கு அமெரிக்கா எதுவும் செய்யமுடியாது என்று முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி கருதினார்.

அதனால்தான் அவர் இலங்கைத் தமிழர்களை ஆதரித்தார். இப்பொழுது இருக்கும் மத்திய அரசுகூட இந்திராகாந்தியின் வழியையே பின்பற்றவேண்டும். இதற்காகப் பிரதமரையும், வெளியுறவுத்துறை அமைச்சரையும் சந்தித்து வலியுறுத்துவேன்.

ஏற்கனவே, இலங்கைத் தமிழர்களின் நலன்காக்க நோர்வே தொடங்கிவைத்த அமைதிப் பேச்சுவார்த்தையில், இந்திய அரசு கலந்துகொள்ளவேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்து, குறைந்த பட்ச செயல் திட்டத்தில் அதை இணைக்கக் கூறினேன். அதன்படி குறைந்த பட்ச செயல் திட்டத்தில் அது சேர்க்கப்பட்டது.

தமிழர்கள் எங்கு சென்றாலும், முதலில் அந்த மண்ணை வளப்படுத்துவார்கள். பின்பு அங்கே பாதிப்புக்காளாவார்கள். கர்நாடகத்தில் - கோலார், தங்கவயலில் தமிழர்கள் தங்கம் எடுத்து நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்தினர். ஆனால், இப்போது அவர்கள் அகதிகளாக வாழ்க்கை நடத்துகிறார்கள்.

பெங்களூரில் தமிழர்களாகிய உங்களுக்குப் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால், கன்னடர்களும் எமது சகோதரர்கள் என்பதை உணர்ந்து, அவர்கள் உங்களைப் புரிந்து கொள்ளாமல், பிரச்சினைகள் செய்தாலும் உங்களது நல்ல மனதை அவர்கள் புரிந்து கொள்ளும்படி நீங்கள் நடந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

விழாவில் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனுக்கு உலகப் பெருந்தமிழர் விருது வழங்கப்பட்டது.

## பெற்றோல் விலை உயர்வினால் சாதாரண மக்களே பாதிப்பு!

### பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட்டதன் காரணமாக பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

சொகுசு வாழ்க்கையை வாழ்பவர்கள் மட்டுமல்லாமல், சாதாரண மக்களும் பெற்றோலின் விலை அதிகரிப்பினால் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

விசேடமாக சாதாரண மக்களும் அன்றாடப் பிழைப்புக்கான ஓட்டோ வண்டி செலுத்தும் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்டவர்களும், பத்து லட்சத்துக்கு மேற்பட்ட மோட்டார் வண்டி பாவனையாளருமே பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்ட போதும் அவை இரண்டு வீதத்துக்கும் அதிகமானதாக இருக்கவில்லை. ஆனால், இப்போதைய அரசாங்கம் பெற்றோல் விலையை சுமார் 14 வீதத்தால் அதிகரித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எண்ணெய் அகழ்வு மன்னாரில் ஆரம்பிக்கப்படும்

(கொழும்பு)

மன்னாரில் எண்ணெய் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளப் போவதாக, எண்ணெய் வள இயக்குநர் எட்வின் டைட்டஸ் தெரிவித்தார்.

குறிப்பிட்ட பிரதேசங்களில் அதிகளவான எண்ணெய் வளங்கள் இருப்பதற்கான தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, அகழ்வுப் பணிகளுக்காக சர்வதேச கேள்விப் பத்திரங்கள் கோரப்படப் போவதாகவும் டைட்டஸ் மேலும் தெரிவித்தார்.

மன்னாரில் சுமார் 7 இடங்களில் எண்ணெய் வளங்கள் இருப்பதாக ஆரம்பக் கட்ட ஆய்வுகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(01)



பெங்களூரில் நடந்த உலகத் தமிழர் பேரமைப்பு மாநாட்டில் கவிஞர் காசி ஆனந்தன் குத்துவிளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், அருகில் சந்திரசேகரன், மாவை சேனாதிராசா, நெடுமாறன், வைகோ உட்பட தமிழ் உணர்வாளர்களையும் படத்தில் காணலாம்.

## புலிகளுக்கு எதிரான பிரசாரத்துக்காகவே கருணா சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டார்!

### சர்வதேச, உள்நாட்டு ஊடகங்கள் கருத்து

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட கருணாவை சிங்கப்பூருக்குக் கொண்டு சென்று, விடுதலைப் புலிகளுக்கு எதிரான சர்வதேச பிரசாரங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருப்பதாக, சர்வதேச மற்றும் உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் ஒரு கட்டமாக அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான முக்கிய இராஜதந்திரிகள் கருணாவை மிக விரைவில் சந்திக்கவுள்ளதாக அந்த ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சந்திப்பின்போது - விடுதலைப் புலிகள் தொடர்பான பல தகவல்களை கருணா வெளியிடக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின் றது.

விடுதலைப் புலிகளிடமுள்ள ஆயுத தளபாட விபரங்கள் மற்றும் சர்வதேச ஆயுத முகவர்கள் தொடர்பான விபரங்களையும், விடுதலைப் புலிகளுக்கும், சர்வதேச அமைப்புக்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த விடயங்களையும் அமெரிக்க இராஜதந்திரிகள் பெற்றுக்கொள்ள முயல்வார்கள் என்றும் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகள் மீது சர்வதேச அழுத்தத்தை அதிகரிக்கும் நோக்குடனேயே கருணா நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளார் எனவும் கருதப்படுகிறது.

இதேவேளை - சிங்கப்பூரில் தங்கியுள்ள கருணாவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சந்திப்பார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

உத்தியோகபூர்வமான விஜயமொன்றினை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ள ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர நாடு திரும்புவதற்கு முன்னர், அங்கிருந்து சிங்கப்பூருக்குச் செல்வார் என்றும், அங்கு கருணாவைச் சந்தித்து முக்கிய சந்திப்பை நடத்துவார் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(01)

## இரண்டாம் தவணைப் பரீட்சை

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இரண்டாம் தவணைப் பரீட்சை இந்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பித்து ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி முடிவுறவுள்ளது.

பரீட்சைகள் வலய மட்டத்தில் நடைபெறும். (122)

## படையினரை பிடிக்க விரைவில் தேடுதல்!

இராணுவத்திலிருந்து தப்பியோடிய படையினரைக் கைதுசெய்வதற்கு விசேட தேடுதல் நடவடிக்கையை ஆரம்பிக்கவிருப்பதாக, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய பலர் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் இவர்களால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

தப்பியோடிய படையினரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு ஆலோசித்து வருகிறது. இவர்களுக்காக விரைவில் பொது மன்னிப்பு வழங்கும் அறிவிப்பு வெளியாகும்.

இந்த ஆட்சேர்ப்புக் காலத்தில் இணைந்துகொள்ளாதவர்கள் விசேட தேடுதல்கள் மூலம் கைதுசெய்யப்படுவர் என்றும், பின்னர் இவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவித்தார். (01)

## அவலத்தைக் கொடுத்தவனுக்கே அதனைத் திருப்பிக் கொடுப்பதில் புலிகளின் தலைமை பின்நிற்காது!

### அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்

(மட்டக்களப்பு)

அவலத்தைக் கொடுத்தவனுக்கே அவலத்தைத் திருப்பிக்கொடுப்பதில் விடுதலைப் புலிகளின் தலைமை என்றும் பின்நிற்காது என, விடுதலைப் புலிகளின் அம்பாறை - மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை தம்பிலுவில் மகா வீத்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசும்போதே குயிலின்பன் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்மக்கள் மீதும், போராளிகள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைத் தடுத்துநிறுத்த பொது மக்கள் தயாராக வேண்டும்.

திட்டமிட்ட வகையில் நடத்தப்படும் இதுபோன்ற துரோகத்தனமான தாக்குதல்களுக்கு எதிராக மக்கள் சக்தி கிளர்ந்தெழவேண்டும்.

காலம் காலமாக தமிழ்த்தேசத்தை சீர்குலைக்கும் துரோகங்கள் உருவாகி வந்தாலும் தமிழ்த்தேசியத்தை உறுதியுடன் முன்னெடுப்பதில் விடுதலைப் புலிகள் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர்.

பேச்சுவார்த்தைகள் மூலம் நிரந்தரமான தீர்வுகாணப்படவேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாக உள்ளனர்.

யுத்தம் ஒன்று வருமென பொது மக்கள் மத்தியில் தற்போது ஒருவித பீதி நிலவுகின்றது. விடுதலைப் புலிகள் யுத்தம் ஒன்றை நோக்கிச் செல்ல விரும்பவில்லை. அவர்கள் யுத்தத்தை வெறுக்கின்றனர் என்றும் குயிலின்பன் மேலும் தெரிவித்தார்.

## தென் கிழக்காசியாவிலேயே நடந்த மிகப்பெரிய அவலம் கறுப்பு ஜுலை

### பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில்

(கொழும்பு)

இலங்கையில் மட்டுமன்றி, தென் கிழக்காசியாவிலேயே மிகப்பெரும் அவலமாக கறுப்பு ஜுலை அமைந்துள்ளதாகப் பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற இந்தத் துயரம் இனி ஒருபோதும் ஏற்படாமல் இருக்க அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

இந்தநாட்டில் மூன்று சமூகங்களைச் சேர்ந்த மக்களும் சமாதானத்துடன் வாழ வேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி பட்ட கற்கை நெறியின் ஆரம்ப வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

(01)

# இறுதிப்போட்டி அணியை தீர்மானிக்கும் முக்கியமான ஆட்டம் இன்று நடைபெறும்

## இந்தியா - இலங்கை களத்தில்






ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டியில் இலங்கை அணியுடன் மோதவுள்ள அணியைத் தீர்மானிக்கவுள்ள முக்கியமான போட்டி இன்று நடைபெறவுள்ளது.

2 ஆவது சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோதவேண்டும். புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதிபெறும்.

2 ஆவது சுற்றில் இதுவரை ஒவ்வொரு அணியும் தலா 2 ஆட்டத்தில் விளையாடியுள்ளன. அதன்படி இலங்கை 2 ஆட்டத்தில் - 2 வெற்றியுடன் 12 புள்ளிகள் பெற்று முதல் இடத்தைப் பிடித்துள்ளது. அந்த அணி இறுதிப்போட்டிக்கும் தகுதி பெற்றுவிட்டது.

இந்தியா ஒரு வெற்றி, ஒரு தோல்வியுடன் 7 புள்ளிகளும், பாகிஸ்தான் ஒரு வெற்றி, ஒரு தோல்வியுடன் 5 புள்ளிகளும் பெற்றுள்ளன. பங்களாதேஷ் 2 தோல்வியுடன் புள்ளி எதுவும் பெறவில்லை.

இந்திய - பாகிஸ்தான் அணிகள் தலா ஒரு வெற்றிபெற்றுள்ள போதிலும், 2 போனஸ் புள்ளி மூலம் இந்தியா முன்னிலையில் உள்ளது. பங்களாதேஷுக்கெதிராக ஒரு போனஸ் புள்ளி கிடைத்தது.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் தோற்றபோதும், இந்திய அணி 241 ஓட்டங்கள் எடுத்தது. 240 ஓட்டங்களை தொட்டதன் மூலம் ஒரு போனஸ் புள்ளி இந்தியாவிற்கும் கிடைத்தது. இந்த 2 போனஸ் புள்ளி மூலம் பாகிஸ்தானை விட இந்தியா 2 புள்ளிகள் முன்னிலையில் உள்ளது.

2 ஆவது சுற்றுப்போட்டியின் 5 ஆவது லீக் ஆட்டம் கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது. இதில் இந்திய - இலங்கை அணிகள் மோதவுள்ளன.

இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றால் மட்டுமே இந்தியா இறுதிப் போட்டிக்கு தகுதிபெறும். இதனால் இந்த ஆட்டம் இந்திய வீரர்களுக்கு வாழ்வா சாவா போராட்டமாக இருக்கும்.

இன்றைய ஆட்டத்தில் இந்தியா தோல்வியுற்றால் பாகிஸ்தான் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுவிடும். பாகிஸ்தான் அணி நாளை பங்களாதேஷுடன் மோதவுள்ளது. இதில் அந்த அணி வெற்றிபெறும் எனக் கருதப்படுகின்றது.

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான இன்றைய போட்டி பிற்பகல் 2.45 மணிக்கு ஆரம்பமாகும். தூர்தர்சனில் இந்தப் போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

# அமெரிக்க மகளிர் ரெனிஸ் இறுதிப்போட்டியில் செரீனா



லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்று வரும் உலக மகளிர் ரெனிஸ் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸை எதிர்த்து லின்ட்சே டேவன்போர்ட் மோதவுள்ளார்.

சனிக்கிழமை அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன.

முதல் ஆட்டத்தில் செரீனா 6-3 , 7-6 என எலீனா டேமன்டீவாவைத் (ரஷ்யா) தோற்கடித்தார்.

தரவரிசையில் செரீனா முதல் இடத்திலும், டேமன்டீவா 4 ஆவது இடத்திலும் இருந்தனர்.

டேவன்ட்போர்ட் - வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோருக்கு இடையிலான மற்றோர் அரையிறுதி ஆட்டத்தில் டேவன்போர்ட் 7-5, 2-0 என முன்னிலை பெற்றிருந்தபோது வலது மணிக்கட்டில் காயமேற்பட்டு வெளியேறினார் வில்லியம்ஸ். இதனால் டேவன்போர்ட்டும் - செரீனாவும் இறுதிப் போட்டியில் மோதவுள்ளனர்.




# வலுவிழந்தோருக்கான போட்டி; வெற்றிபெற்றோர் விபரங்கள்!

யாழ் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நிறுவனத்தின் பயனாளிகளுக்கான விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை காலை 9.15 மணி தொடக்கம் 11.15 மணி வரை சுண்டிக்குளியிலும், பிற்பகல் 1.45 மணிதொடக்கம் மாலை 4.30 மணிவரை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யு.எஸ் எய்ட் மிஷனின் பணிப்பாளர் கலாநிதி கரல் பேக்கரும் கௌரவ விருந்தினராக மோட்டிவேஷன் அறக்கொடை நிதியத்தின் உதவிப் பணிப்பாளர் ராணி சாமுவேலும் கலந்துகொண்டனர். காலை 9.15 மணிக்கு அகவணக்கத்துடன் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

9.30 மணிக்கு சைக்கிள் ஓட்டப் போட்டியும், அதன் பின்னர் முச்சக்கர வண்டி ஓட்டப்போட்டியும் இடம் பெற்றன. இப்போட்டியில் வெற்றிபெற்றவர்கள் விபரம் வருமாமாறு -

சைக்கிள் ஓட்டப் போட்டி (ஆண்கள்) முழங்காலுக்கு மேல் இழந்தவர்கள் - முதலாமிடம் ப.குகானந்தன் (வயது 22), இரண்டாமிடம் பா.விஜயதாஸ் (வயது 28), மூன்றாமிடம் மு.பொன்னுத்துரை (வயது 50),

சைக்கிள் ஓட்டப் போட்டி (ஆண்கள்) முழங்காலுக்குக் கீழ் இழந்தவர்கள் - முதலிடம் வீ.விக்னேஸ்வரன் (வயது 29), இரண்டாமிடம் இ.கருணாமூர்த்தி (வயது 29), மூன்றாமிடம் கி.சந்திரமோகன் (வயது 25).

வலுவிழந்தோருக்கான முச்சக்கர வண்டி போட்டி (ஆண்கள்) - முதலிடம் சே.மோகன்ராஸ் (வயது 31), இரண்டாமிடம் பரமு. பத்மானந்தன் (வயது 41), மூன்றாமிடம் ப.பரமகுமார் (வயது 37),

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி முழங்காலுக்குக் கீழ் இழந்தவர்கள் - முதலிடம் க.ரஜனிகா (வயது 21), இரண்டாமிடம் ரூபன் சசிரேகா (வயது 27), மூன்றாமிடம் சி.சுமதி (வயது 26).

# மேற்கிந்தியத்தீவுகளுடனான டெஸ்ட்

# இங்கிலாந்து வீரர் மைக்கல் வோகன் இரண்டாவது இனிங்ஸிலும் சதம்!



(லண்டன்)

லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காவது நாள் ஆட்டத்தில் 5 விக்கெட் இழப்புக்கு 325 ஓட்டங்கள் என்ற நிலயையில் இங்கிலாந்து அணி ஆட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தது.

இதனால் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றிபெற 478 ஓட்டங்களைப் பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவது நாள் ஆட்டமுடிவில் 223 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த இங்கிலாந்து நான்காவது நாள் ஆட்டத்தை ஆரம்பித்தது.

5 விக்கெட் இழப்புக்கு 325 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இங்கிலாந்து தனது இரண்டாவது இனிங்ஸ் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோகன் இரண்டாவது இனிங்ஸிலும் சதம் அடித்தார். அவர் 101 ஓட்டங்களைப் பெற்றார்.

ட்ரஸ்கோதிக் 45, ஸ்ரரஸ் 35, தோர்ப் 38, பிளின்ரொப் 58 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர்.

101 ஓட்டங்களுடன் வோகனும், 15 ஓட்டங்களுடன் கீயும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.





இதையடுத்து வெற்றிபெற 478 ஓட்டங்கள் பெறவேண்டும் என்ற நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது இரண்டாவது இனிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்தது.

தொடக்க ஆட்டக்காரர் கைல் அபாரமாக ஆடி 1 சிக்ஸர், 13 பவுண்டரிகளுடன் 81 ஓட்டங்களைப் பெற்றார். ஆயினும் சிமித், சர்வான் ஆகியோர் முறையே 6,4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

லாரா 11 ஓட்டங்களுடனும், சந்தர்போல் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி 3 விக்கெட் இழப்புக்கு 114 ஓட்டங்கள் பெற்றிருந்தநிலையில் - போதிய வெளிச்சம் இன்மையால் நான்காவது நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

நான்காவது நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பில் கொலின்ஸ் 3 விக்கெட்டுக்களையும், கைல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதேபோல் இங்கிலாந்து அணி வீரர்கள் ஹோகாட், ஹர்மிசன், ஜைல்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

# மோசமான பந்துவீச்சு, களத்தடுப்பே இந்திய அணி தோல்விக்கு காரணம்!

## அணித்தலைவர் கங்கூலி கூறுகிறார்



மோசமான பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பே பாகிஸ்தானுடனான போட்டியில் தோல்வியடையக் காரணம் என்று அணித்தலைவர் கங்கூலி கருத்துத் தெரிவித்தார்.

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி முக்கியமான ஆட்டத்தில் பாகிஸ்தானிடம் 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இந்தத் தோல்வியால் இந்திய அணி வீரர்கள் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்தத் தோல்வி குறித்து இந்திய அணிக் கப்டன் கங்கூலி கூறியதாவது -

பாகிஸ்தானுடனான தோல்வியால் இந்திய அணிக்குக் கடுமையான நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இந்தத் தோல்விக்கு ஆடுகளம் காரணம் என்று குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. ஓட்டங்களை அடிக்கக்கூடிய அளவுக்கு ஆடுகளம் இருந்தது.

300 ஓட்டங்கள் இலக்கு என்பது சற்று கடினம்தான். ஆனால் எடுக்கக்கூடிய இலக்குத்தான். விக்கெட்டுக்கள் விழுந்ததால் இலகக்கை நோக்கி முன்னேற முடியவில்லை. 151 ஓட்டங்களில் 5 விக்கெட்டுக்கள் விழுந்ததால் போனஸ் புள்ளி பெறும் வகையில் ஆட முடிவுசெய்தோம். அதுவும்கூட கஷ்டப்பட்டுத்தான் கிடைத்தது.

மோசமான பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பே தோல்விக்குக் காரணம். இந்தப் போட்டித் தொடரில் எங்களது ஆட்டம் மோசமாகவே உள்ளது. இந்தத் தோல்வியால் மனம் தளர்ந்துவிடவில்லை.

இறுதிப்போட்டிக்கு தகுதிபெற இன்னும் வாய்ப்பு இருக்கிறது. இலங்கைக்கு எதிராக சிறப்பாக ஆடுவோம். பாகிஸ்தான் வீரர் சொகைப் மலிக் ஆட்டம் அபாரமாக இருந்தது.

இவ்வாறு கங்கூலி கூறினார்.

இதேவேளை, இந்த வெற்றி குறித்து பாகிஸ்தான் கப்டன் இன்ஸமாம் கூறுகையில் -

இந்த வெற்றி மகிழ்ச்சி அளிக்கிறது. அதே நேரத்தில் போனஸ் புள்ளி பெற முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது. இலங்கைக்கெதிராக மோசமாக ஆடினோம். தற்போது வீரர்கள் சிறப்பாக ஆடுவது திருப்தியைத் தருகிறது.

ஒரு நாள் போட்டியைப் பொறுத்தவரை இந்திய அணி - 7 துடுப்பாட்ட வீரர்கள், 4 பந்துவீச்சாளர்களைக் கொண்டுதான் கடந்த காலங்களில் ஆடி வந்தது. ஆனால் இந்த ஆட்டத்தில் 6 துடுப்பாட்ட வீரர்கள், 5 முதன்மை பந்து வீச்சாளர்கள் இடம் பெற்றது ஆச்சரியமான முடிவாகும் எ ன மேலும் தெரிவித்தார்.

### மெய்வல்லுனர் திறனாய்வு

(நெடுந்தீவு)

தென்னிந்தியத் திருச்சபையின் நெடுந்தீவு மத்தி பகற்பராமரிப்பு நிலைய சிறார்களின் 'மெய்வல்லுநர் திறனாய்வு - 2004' இன்று மாலை 3.00 மணிக்கு திருச்சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (113)




# தென்னாபிரிக்க வீரர் கிப்ஸ் காயமுற்றார்!

(ஜொகன்னஸ்பேர்க்)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி வீரர் கிப்ஸுக்கு பயிற்சியின்போது கையில் காயம் ஏற்பட்டது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அடுத்தமாதம் இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது.

இந்தப் போட்டிக்கான தென்னாபிரிக்க அணி கடந்த சில நாட்களாக பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. பயிற்சியின் போது முன்னணி வீரர் கிப்ஸ் கையில் காயம் ஏற்பட்டது. ஆனாலும் அவர் தொடர்ந்து அணியில் இருக்கிறார். அவருக்குப் பதிலாக கூடுதலாக ஒரு வீரரை சேர்க்க தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை முடிவு செய்திருக்கிறது.

மாற்று வீரர் யார் என்ற விவரம் இன்னும் முடிவாகவில்லை. தென்னாபிரிக்க - இலங்கை அணிகள் மோதும் முதல் டெஸ்ட் ஓகஸ்ட் 30 ஆம் திகதி நடக்கவுள்ளது.

ஆசிய கிண்ணப் போட்டி முடிந்த 3 நாட்களில் இந்தத் தொடர் தொடங்கவிருக்கிறது. இதன்பின்னர் தென்னாபிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் போட்டியில் மட்டும் மோதவுள்ளது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# நவீன தொழில்நுட்பத்துடன் இன்று திறப்புவிழா

அன்பான மனைவி

அழகான குழந்தை

ஆரோக்கியமான குடும்பம்



## குடும்ப ஆரோக்கியத்திற்கு
## நாம் நன்றி கூற வேண்டும்
## எங்கள் மண்ணில் தயாரிக்கும்
## அயடீன் கலந்த ஆனையிறவு உப்பிற்கு

உப்பு உற்பத்தி நிறுவனம்
THE ORGANIZATION FOR PRODUCTION OF SALT

உப்பு உற்பத்தி நிறுவனம்.
A9 சாலை,
ஆனையிறவு.




# குட்டி மீன்




உலகின் மிகமிக நுண்ணிய மீனினம் ஒன்று அமெரிக்க விஞ்ஞானிகளினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது 'ஸ்டவுட்' என அழைக்கப்படுகின்றது. இதனுடைய நீளம் ஏறக்குறைய 7 மில்லி மீற்றர் ஆகும்.

இவ்வளவு காலமும் உலகின் மிகச் சிறிய மீனினம் என்ற இடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருந்த டிவார்கோபி மீனினை இது மிஞ்சிவிட்டது. இதனுடைய நீளம் ஒரு சென்றி மீற்றராக இருக்கின்றது. ஆனால், இப்படியான மீனினங்கள் அவுஸ்ரேலியாவில் இருந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. மிகச் சிறிய மீனினங்களைத் தேடும் பணி - 1979 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

ஆனால், 'ஸ்டவுட்' இன மீன்களின் ஆண் வர்க்கமே 7 மில்லி மீற்றர் நீளமுடையது. பெண் மீனினங்கள் ஏறக்குறைய 8.4 மில்லி மீற்றர் நீளம் கொண்டவையாக இருக்கின்றன. இந்தவகையான மீனினங்களைப் பிடிப்பது மிகவும் கடினமானதாக இருக்கின்றது. எச்.ஜே. வால்க்கர் என்ற கலிபோர்னிய விஞ்ஞானி செய்த ஆய்வுகளின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்தவகை நுண்ணிய மீனினங்களுக்கு முள்ளந்தண்டு எவ்வாறு விருத்தியடைந்திருக்கின்றது என்ற ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

# அரிதான பறவைக்களின் விஷக் காய்ச்சல்



உலகின் அரிதான பறவை [illegible] இனங்கள் மூன்று, நியூசிலாந்திலிருந்து கடுமையான விஷநோயினால் இறந்திருக்கின்றன. கக்கப்பூ எனப்படுகின்ற கிளி இனங்கள் கூடுதலாக இப்படியான முறையில் பலியாகியிருக்கின்றன. இது ஒரு பக்றீரியா நோய் ஆகும். ஆகவே, 86 கிளி இனங்கள் நாட்டைவிட்டே வெளியேறியிருக்கின்றன. உடனடியாக ஒரு நோய் எதிர்ப்பு சக்தி சிகிச்சை முறை ஒனறு - அரசாங்கத்தால் இந்தப் பறவையினங்களுக்கு கொடுக்கப்படுகின்றது. பக்றீரியாவானது, தோலினூடாக இந்தப் பறவையினங்களுக்கள் புகுந்து, இரத்தத்தினுள் நஞ்சுததன்மையைப் புகுத்துகின்றது.

ஒரு பறவைக்கு இந்த நோய் ஏற்படுமானால், அது மற்றப் பறவைகளையும் தாக்கும் எனக் கூறப்படுகின்றது. மூன்று வகையான அரிதான பெண் கிளியினங்கள் அரோரா அவூரா மற்றும் வொலி ஆகியன 2002 ஆம் ஆண்டு வெப்பகாலத்தில் இறந்திருக்கின்றன. கக்கப்பூ என்ற கிளியினங்கள் - மொத்தமானவை, கடும் பச்சை நிறமானவை அத்துடன், 5 கி.மீ தூரம் வரையில் பறக்கக்கூடியவை. இதேவேளை, இப்படியாக இறந்துகொண்டிருக்கின்ற பறவைகளின் எண்ணிக்கை காலப்போக்கில் அதிகரித்தால், பெறுதற்கரிய பறவை இனங்கள் இருக்காது எனக் கூறப்படுகின்றது.

# அலையும் கடல் உயிரினங்கள்



சமுத்திரங்களில் ஏற்படுகின்ற வெப்பம் காரணமாக அங்கே க்ாணப்படுகின்ற உயிரினங்கள் - கூட்டம் கூட்டமாக, வேறு வெப்பம் குறைந்த கடல்களை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றன. இதன் காரணமாக 20 ஆயிரம் டொல்பின்கள் ஆயிரக் கணக்கான பித்தளை நிறமுடைய சுறாக்கள் மற்றும் 10 ஆயிரம் கேப் களட்ஸ் ஆகியன, இப்படியான பயணத்தைத் தொடங்கியுள்ளன. மிகப் பெரிய டொல்பின்கள் இப்படி இடம் மாறும்போது, அவற்றினைக்கொண்டு படகுகளைச் செலுத்துபவர்கள் பாடு மிகவும் திண்டாட்டமாகின்றது. பீசலில் இயங்கும் படகுகள் டொல்பின் மூலம் இயக்கப்படுவதால், எரிபொருள் செலவு மிச்சமாகின்றது. இப்படியாக பெரியளவில் கூட்டம் கூட்டமாக மிகப் பெரிய மீனினங்கள் கடலகளில் ஒரே நேரத்தில் பயணம் செய்வதால், கப்பல்கள் பாரிய விபத்துக்களை எதிர்நோக்குகின்றன. தற்போது தென்னாபிரிக்க நாட்டுக் கரையோரங்களில் தான் வெப்பநிலை மாற்றங்கள் சடுதியாக ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக கேப்டவுணை அண்டிய அந்தப் பிரதேசத்தில் கடல் உயிரினங்கள் அங்குமிங்கும் பொருத்த'மான காலநிலையை நோக்கி அலைந்து கொண்டிருக்கின்றன.

# காபனீரொட்சைட் அகற்றல்

கடந்த 200 வருடங்களாக வளிமண்டலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்ற காபனீரொட்சைட் வாயுக்கள் இப்போதுதான் தங்களுடைய வேலையைக் காட்டியிருக்கின்றது. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் வாயுவின் செறிவு அதிகரித்திருக்கின்றது.



இதேவேளை - நீரிலும் காபனீரொட்சைட்டின் செறிவு அதிகரித்திருக்கின்றது. தற்போது சமுத்திரங்களில் காணப்படுகின்ற 48 வீதமான கானீரொட்சைட்டின் செறிவினைக் குறைப்பதற்கான வேலைத்திட்டங்களும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. 1800 ஆம் ஆண்டுக்கும், 1994 ஆம் ஆண்டுக்கும் இடையில் 118 மில்லியன் மெற்றிக் தொன் - காபனீரொட்சைட் சமுத்திரங்களிலிருந்து அகற்றப்படாமல் இருக்கின்றன. காபனீரொட்சைட்டின் செறிவு அதிகரிப்பதன் காரணமாக, கடலுக்கடியிலிருக்கின்ற மரங்கள் வளருகின்றன.



ஆனால், கடல் வாழ் உயிரினங்களின் பாடு மிகவும் திண்டாட்டமாக உள்ளன.

காபனீரொட்சைட்டின் செறிவு அதிகரிப்பதனால், கல்சியம் காபனேற்றுப் பாறைகள் கடலுக்கடியில் அதிகம் உருவாகின்றன. தற்போது அபிவிருத்தியடைந்த நாடுகளில் காபனீரொட்சைட்டைக் கடலிலிருந்து சுத்திகரிக்கின்ற ஒருமுறை - பல இயந்திரங்களால் சுத்திகரிக்கப்படுகின்றது. இன்னும் பல வருடங்களில் 90 வீதமான காபனீரொட்சைட் வாயு சுத்திகரிக்கப்படும் என ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

# தொலைத் தொடர்பு செய்மதி



அனிக் எவ் 2 என்ற செய்மதியை எடுத்துக்கொண்டு, ஏரின் 5 என்ற ரொக்கட் தரையிறங்கியிருக்கின்றது.

இதில் என்ன சிறப்பம்சம் என்றால், இதுதான் உலகின் மிகப் பெரிய தொலைத் தொடர்பு செய்மதியாகக் காணப்படுகின்றது.

இது ஏற்கனவே தரையிறங்க இருந்தது. ஆனாலும், காலநிலை சீரில்லாத காரணத்தால், தரையிறக்கத்தில் இருமுறை தடங்கல்கள் ஏற்பட்டது.

ஏறக்குறைய 6 தொன் நிறையுடைய எவ் 2 செய்மதி - வட அமெரிக்காவில் இன்ரநெட் வலையமைப்பினைத் தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது.

இது முற்று முழுதாக சோலர் கலத்தினால் இயங்குகின்றது. இந்த ஏரின் என்ற ரொக்கட் 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் விண்வெளியில் வைத்து ஒரு பாரிய பழுதை எதிர்நோக்கியது.

ஆனாலும், அது தொழில் நுட்பவியலாளர்களால் சீர்செய்யப்பட்டு, தொடர்ந்து விண்வெளியில் தனது பயணத்தைத் தொடங்கியது.

செய்மதிகளைத் தாங்கிச் செல்கின்ற ரொக்கட்டுக்கள் பிரத்தியேகமான முறையில் தயாரிக்கப்படவேண்டியிருக்கின்றன.

ஏரின் 5 என்ற ரொக்கட்டின் தயாரிப்புச் செலவு மட்டும் 3 பில்லியன் யூரோக்களாகும் என விண்வெளியியலாளர்கள் கூறுகின்றார்கள்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# திரை விமர்சனம்

## காமராஜ்



எவ்வளவு பெரிய திரையுலகம் இருந்தாலும், இப்படியான ஒரு முயற்சியை இவ்வளவு காலமும் செய்யத் துணியாது இருந்த இந்தநேரத்தில், ஒரு சவாலுடன் இதனைச் செய்யத் துணிந்த இயக்குநர் ஏ.பாலகிருஷ்ணனைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இளைய தலைமுறைக்குத் தெரியாத ஒரு அற்புதமான தலைவரை இந்தப் படம் அடையாளம் காட்டியிருக்கின்றது. விருதுப் பட்டியில் பிறந்து, படிப்பறிவு குறைந்த ஒருவன் டெல்லி



சென்று 2 பிரதமர்களை ஆட்சிக்குக் கொண்டுவரும் பெரியதலைவனாகின்றான். இப்படியான அந்தப் பெரிய தலைவன் காமராஜரின் வாழ்க்கையை இந்தப் படம் விபரிக்கின்றது.

தமிழகத்தின் முதல்வராக அவர் இருந்தபோது, நடைபெற்ற பல அம்சங்கள் படத்தில் சுவையாக வந்துபோகின்றன. அத்துடன், ஏழைகளின் கதாநாயகனாக அவர் படத்தில் வருகின்ற காட்சிகள் நெஞ்சை நெகிழ வைக்கின்றன. பொதுவாக காங்கிரஸ்காரர்களே அதிகமாகப் படம் முழுக்க வருகின்றார்கள்.

1967 ஆம் ஆண்டில் காமராஜ் தலைமையிலான காங்கிரஸ் தோல்விக்கு மிக முக்கிய காரணமாகிய இந்தப் போராட்டத்தையும், எம்.ஜி.ஆர். சுடப்பட்டதையும் இந்தப் படத்தில் காட்டியிருந்தால், மிகவும் நன்றாக இருந்திருக்கும்.

இதேவேளை - அவர் இந்திராகாந்தியினால் பழிவாங்கப்படும் காட்சி ஒரு நல்ல திருப்பம். பாடல்களில் 'நாடு பார்த்ததுண்டே' என்ற பாடல் அனைவரின் மனதிலும் நிலைத்து நிற்கின்றது.

படத்தில் ரிச்சர்ட் மதுரம் நிஜ காமராஜ் போலவே இருக்கிறார். இளவயது காமராஜராக சம்பத். பெரியாராக கோவை இராமசாமி, சி.சுப்பிரமணியமாக அரவமுதன், இந்திராகாந்தியாக டி.எஸ்.ஆனந்தி ஆகியோர் பொருத்தமாகவுள்ளனர். செம்பு ஜெயராஜ், டிப்ரான்சிஸ் கிரிமா ஆகியோர் திரைக்கதை வசனம் எழுதியுள்ளனர். ஒளிப்பதிவு ரங்கசாமி. படத்தொகுப்பு வி.டி.விஜயன்:, இளையராஜாவின் பின்னணி இசை மற்றும் பாடல்கள் மிக மிக அருமை. காமராஜ் 'கிங் மேக்கர் தான்'

- PNS

# நல்ல மருந்து

குருதி உறைதலுக்கும், இதய அமுக்கத்துக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. குருதி கூடுதலாக உறைந்தாலும் ஆபத்து. குருதி குறைவாக உறைந்தாலும் ஆபத்து. குருதியானது அளவாக உறைதல்வேண்டும். அமெரிக்க நாட்டு விஞ்ஞானிகள், ஜின்செங் என்ற ஒருவகைத் தாவரம் குருதி உறைதல் குறைபாட்டு நோய்க்கு நல்ல சிகிச்சையைக் கொடுத்திருக்கின்றது எனக் கூறியிருக்கின்றார்கள். 20 நோயாளிகளிடம் செய்யப்பட்ட ஆய்வுகளின் படி, இவை நல்ல விளைவைக் கொடுத்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஆரம்பத்தில் 5 மில்லிகிராமும், பின்பு 2 கிராமும் ஜின்செங் கப்சூல்ஸ் கொடுக்கப்பட்டது. எடுத்தவுடன் தொடர்ச்சியாக இந்த மருந்து எடுப்பது அவ்வளவு நன்றாக இல்லை என்ற கருத்து இருக்கின்றது. 12 நோயாளிகளில் சிலருக்குக் குருதியின் அளவு குறைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.



ஆனால், இந்த மருந்துகளைத் தொடர்ந்து பாவித்தால், சிலவேளைகளில் வெட்டுக் காயங்கள் ஏற்படும்போது உறைகின்ற குருதியின் அளவு குறையும்.

ஆகவே, தொடர்ந்தும் குருதி ஓடிக்கொண்டே இருக்கும் என விஞ்ஞானிகள் பயமுறுத்துகின்றார்கள்.

# எல்ஜி மொபைல் போன்



3 ஜி தொலைத்தொடர்பு சேவை நிறுவனமும், எல்ஜி கம்பனியும் இணைந்து புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய தொலைபேசிச் சேவைய்யை உலகுக்கு வழங்கத்தீர்மானித்துள்ளன.

எல்ஜியு 110 என்ற கையடக்கத் தொலைபேசியில் காணப்படுகின்ற சில குறைபாடுகள் களையப்பட்டு, அது நவீனமாக்கப்பட்டுள்ளது. அத்துடன், பனசொனிக் எக்ஸ் 60 என்ற கையடக்கத் தொலைபேசியை விழுத்தக் கூடியளவுக்கு இது உருவாக்கப்பட்டிருக்கின்றது என்கின்றது எல்ஜி நிறுவனம்.

எல்ஜியு 10 மொபைல் போனில் டிஜிற்றல் கமரா, விடியோ பிளேயர், 120 மணித்தியாலம் படம் எடுக்கக்கூடிய ரெக்கோடர், 140 நிமிடம் தொடர்ந்து பேசுவதை ஒலிப்பதிவு செய்யும் பதியி ஆகியன காணப்படுகின்றன. அத்துடன் இது 120 கிராம் நிறையுடையது. 65,335 நிறங்கள் உள்ளன. 14 மெகாபைட் மெமறி காணப்படுகின்றது. எம்பி 3 பிளேயர் உண்டு. இதேவேளை விளையாட்டு நிகழ்வுகளை ஓட்டங்கள் ஆகியவற்றைப் பார்ப்பதுபோன்ற படங்கள்கூட இந்த 3 ஜி நெட்வேர்க் இதனால் பெறலாம் எனக் கூறப்படுகின்றது. இதனுடைய வருகை நொக்கிய 7650 வகைக்கும் வயிற்றில் புளியைக் கரைக்கிறது.

# மெகா மழைத்துளி



சாதாரணமாகப் பெய்கின்ற மழைத்துளியின் அளவு மிகச் சிறியது. ஆனால், இராட்சத மழைத்துளிகள் பிரேசில் நாட்டில் பெய்திருக்கின்றன. அமெரிக்க நாட்டின் விஞ்ஞானிகள் மிகப் பாரிய மழைத்துளிகள் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். கடந்த 30 வருடங்களில் இப்பொழுதுதான் இந்த வகையான இராட்சத மழைத்துளிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய ஒரு சென்ரி மீற்றர் அளவான மழைத்துளிகள் பெய்திருக்கின்றன. இந்த வகையான மழைத்துளிகள் ஜெலி மீன்கள் அளவுக்கு இருக்கின்றன. இது கல்லால் எறிவது போல இருப்பதாகப் பிரேசில் நாட்டு மக்கள் கூறியிருக்கின்றார்கள். 1986 ஆம் ஆண்டு ஹாவாய் என்ற இடத்தில் 8 மில்லி மீற்றர் அளவுள்ள பெரிய மழைத்துளி பெய்திருக்கின்றது. அதன் பிறகு இந்த ஆண்டுதான் இந்த அனர்த்தம் ஏற்பட்டிருக்கின்றது. உலகளாவியரீதியில் வானத்தில் பறக்கின்ற அளவுக்கதிகமான விமானங்களின் புகை, சூழலை மாசுபடச் செய்கின்றது. அதுதான் பெரிய பெரிய மழைத்துளிகளை உருவாக்குகின்றது என்ற கருத்தினை விஞ்ஞானிகள் வெளியிட்டிருக்கின்றார்கள். இதேவேளை - இந்த மழைத்துளிகளின் அளவு உடைந்து, சிறு சிறு துளிகளாக்குவதற்கான விஞ்ஞான முறைச் செயற்பாட்டை ஆய்வாளர்கள் இப்போது மேற்கொண்டு வருகின்றார்கள்.

# ஹொலிவூட் சினிமா




ஹொலிவூட் சினிமாவில் இப்பொழுது சட்டபூர்வமற்ற முறையில் திரைப்படங்களின் காட்சிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் திருடப்படுவதால், இந்தச் சினிமா உலகம் பலவிதமான சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கின்றது. இதேவேளை - ஒவ்வொரு சினிமாப் படங்களின் காட்சிகளையும் டவுன்லோட்டுக்குள் கணினிப் பதிவு செய்வதன்மூலம், இத்தகைய சிக்கல்களுக்கான தீர்வு கிடைக்கும் எனக் கருதப்படுகின்றது. இதேவேளை - திருட்டு ஓடியோ சிடிக்களே முதன் முதலில் சட்டபூர்வமற்ற முறையில் சந்தைக்கு வந்தன. ஆனால், தற்போது படம் வெளிவரமுதலே திருட்டு விடியோ சிடிக்கள் சந்தையில் தாராளமாகக் கிடைக்கின்றன. இதேநேரம் கணினி மயப்படுத்தப்பட்ட முறையில் ஓடியோ மற்றும் விடியோ செய்வது எல்லாம் தானாகவே பி2P என்ற நெட்வேர்க்மூலம் பதிவாகின்றது. இது டவுன்லோட் முறைமூலம்தான், மீண்டும் எடுக்கப்படக்கூடியதாகவுள்ளது. இது திருடர்களுக்கு மிகவும் தலையிடியைக் கொடுத்துள்ளது. ஐபி விலாசங்கள் எல்லாம் தெரிந்தால்தான் இத்தகைய விடியோ மற்றும் ஓடியோக்கள் பெறக்கூடியதாக இருக்கும்.

# பாதிப்புக்குள்ளாகும் செயற்கைக் குழந்தைகள்

செயற்கை முறைமூலம் கருத்தரிக்கின்ற குழந்தைகள் பல்வேறுபட்ட நோய்களைச் சந்திக்கின்றனர். இதன் காரணமாகக் குளோனிங் முறைமூலம் கருத்தரிக்கின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை தற்போது குறைந்துகொண்டு வருகின்றது. தாயினுடைய இரத்த அமைப்பும், குழந்தையினுடைய இரத்தமும் சில சில வேறுபாடுகளைச் சந்திப்பதன் காரணமாக இலகுவில் பிள்ளை நோய்வாய்ப்படுகின்றது. இப்படியான குழந்தைகளுக்கு இதய அமுக்கமும் அதிகமாக இருக்கின்றது. இரத்த சம்பந்தமான ஒரு நோய் ஒன்று குளோனிங் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றது. இது டயமண்ட் பிளக்பான் அனீமியா நோய் என அழைக்கப்படுகின்றது. செங்குழியங்களின் வளர்ச்சி இந்தக் குழந்தைகளுக்கு மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன. இதேவேளை பல்வேறுபட்ட அரசாங்கங்களினதும், நீதிமன்றங்கள் செயற்கைக் குழந்தைகளை உருவாக்குதலைத் தடைசெய்வோமா என ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. இதேவேளை அரைகுறையாக கருக்கலைப்பால், தாயினது உடலில் தாக்கங்கள் ஏற்படுகின்றன. மீண்டும் ஒருமுறை கருத்தரிக்கும்பொழுது கருவில் இந்தத் தாக்கம் ஏற்பட்டு, குளோனிங் குழந்தைகளுக்கேற்படும் அதே விளைவுகள் ஏற்படுகின்றன.



# சிங்கள தேசமே எமக்குரியதைத் தாருங்கள் அல்லது நாங்களே எடுத்துக்கொள்வோம்!

## திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவிப்பு



'சிங்கள தேசமே நீங்கள் எங்களுக்குரியதைத் தாருங்கள் அல்லது எமக்குரியதை நாங்களே எடுத்துக் கொள்வோம்' என்று நேற்றுமுன் தினம் திருகோணமலையில் நடைபெற்ற வெலிககடை தியாகிகள் நினைவுநாள் நிகழ்வில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

1983 ஆம் ஆண்டு ஜூலை 25 முதல் 27 வரை வெலிக்கடைச் சிறையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உட்பட 53 தமிழ் அரசியற் கைதிகளின் 21 ஆவது ஆண்டு நிறைவு நினைவுநாள் நிகழ்வுகள், நேற்று மாலை திருகோணமலை கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள 'வெலிக்கடை தியாகிகள் திறந்தவெளி நினைவு அரங்கில்' நடைபெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை அதிதியாக மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

'இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன் இந்த நாட்டில் ஒரு இனப்படுகொலை இடம்பெற்றது. இன்றும்கூட ஊடகங்கள் அதை இனக்கலவரம் என்று கூறுகின்றன. அது பிழை. அன்று நடந்தது இனக்கலவரம் அல்ல. இனப்படுகொலை என்பதைத் தெளிவாகக் கூறவிரும்புகிறேன்.

1983 ஆம் ஆண்டில் மட்டுமல்ல, 1958 ஆம் ஆண்டு முதல் -காலத்துக்குக்காலம் தமிழர் மீது இனப்படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டது. இது நூற்றாண்டு காலமாக தொடர்ந்தது.

எம்மீது ஆயுதம் பிரயோகிக்கப்பட்டபோது, நாங்கள் ஆயுதம் தூக்கினோம். அன்று திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட போது, அதைக் காரணமாகக் கூறி, தென்னிலங்கை முழுவதும் தமிழர்கள் தேடித்தேடி அழிக்கப்பட்டார்கள்.

ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது. கட்டுநாயக்காவிலும், ஆனையிறவிலும், முல்லைத்தீவிலும் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஆயிரக்கணக்கில் படையினர் கொல்லப்பட்டனர். ஆனால், அதற்குப் பதிலடியாக தமிழர்கள் தாக்கப்படவில்லை. இதற்குக் காரணம் -எமது படைபலம் என்பதை யாவரும் அறிவர்.

அண்மையில் என்னைச் சந்தித்த சிங்கள சமூகத்தின் பேராசிரியர் ஒருவர் 'உங்கள் விடுதலைக்காக நீங்கள் போராடுவது சரி. ஆனால், உங்களது தற்கொலைப் போராளிகளின் நடவடிக்கைகள் மிகக் கொடூரமானதாக உள்ளதே' என்று என்னைக் கேட்டார். அப்போது அவருக்கு நான் கூறிய பதில் - 'உங்களது பேரினவாத அரசாங்கம் எம்மீதும், எமது மக்கள் மீதும் கொடூரமான முறையில் விமானத் தாக்குதல்களை மேற்கொண்டு, எமது மக்களைத் தூள்தூளாகச் சிதறிப் போகச்செய்தார்கள்.

போர் விமானங்களின் பேரிரைச்சலால் அதிர்ச்சியடைந்து எத்தனையோ பேர் மரணமடைந்தார்கள். எமது மக்களுக்கு நிகழ்ந்த இந்தக் கொடூரங்களைக் கண்ட பின்பு, நீங்கள் யாரும் உங்கள் அரசாங்கங்களுக்கு, அப்பாவித் தமிழர்களைக் குண்டுவீசிக் கொல்லவேண்டாம் எனக் கூறவில்லை. அந்தக் கொலை பாதகத்தைக் கண்ட எமது போராளிகள் -அத்தகைய கொடூரங்களை மேற்கொண்ட விமானங்களை அழிப்பதற்காக, தற்கொலை அல்ல தற்கொடைப் போராளிகளாக மாறி, தாங்குதல் நடத்தியதை மட்டும் எந்தவகையில் குறைகூறமுடியும்? என அவரிடம் கேட்டேன். இதுதான் இன்றைய உண்மைநிலை.

'போர் வேண்டுமா? சமாதானம் வேண்டுமா? என்று உலகில் யார் கேட்டாலும், சமாதானம் வேண்டும் என்று முதலில் உரத்துக் கூறுபவர்கள் நாங்களே. காரணம் - போரின் முழுவேதனைகளையும் நன்கு அறிந்தவர்கள் நாங்களே.

1983 ஜூலை இனப்படுகொலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இன்று ஜனாதிபதி அனுதாபப்பட்டுக் கொள்கின்றார். ஆனால், அவரது ஆட்சிக் காலத்தில் களுத்துறைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள் பற்றி இன்றுவரை எதுவும் கூறவில்லை. ஜனாதிபதி மனம் திருந்தியவர் போல் காட்டிக்கொள்கின்றார். அது உண்மையான மனமாற்றமாக அமையவேண்டும் எனத் தனதுரையில் மேலும் அவர் குறிப்பிட்டார். (10)

### ஆக்கக் கல்வி கண்காட்சி

நெடுந்தீவுப் பிரதேசத்திலுள்ள முன்பள்ளிச சிறார்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களின் ஆக்கக் கண்காட்சி- எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ளது.

தென்னிந்தியத் திருச்சபையின் நெடுந்தீவு மத்தி பகற் பராமரிப்பு நிலையத்தில் காலை 10.30 மணிக்கு இந்த ஆக்கக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. (113)

### கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கூட்டம்

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும், தையல் போதனாசிரியர்களுக்குமான கூட்டமொன்று - எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தையல் போதனாசிரியர்களால் சமர்ப்பிக்கப்படவேண்டிய மாதாந்த அறிக்கைகளையும் மற்றும் இதர அறிக்கைகளையும் சமர்ப்பிப்பதற்கும் தயாராக சமூகம் தருமாறு கிராம அபிவிருத்தி மாவட்ட உத்தியோகத்தர் செ.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (24)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கும் மருதங்கேணி பாடசாலை

(ஆழியவளை)

மருதங்கோணிப் பிரதேசத்தில் மீளத்திறக்கப்பட்ட கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை - அடிப்படை வசதிகளற்ற நிலையில், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இயங்கிவருவதாக பாடாசாலைச் சமூகத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

போரினால் முற்றுமுழுதாக அழிக்கப்பட்ட இந்தப் பாடசாலை, வேறோர் இடத்தில் தற்காலிகக் கொட்டகை ஒன்றில் சுமார் 150 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.

இந்தத் தற்காலிகக் கொட்டகை- காற்று மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமலுள்ளது.

இந்தப் பாடசாலைக்கு எந்தவித கட்டட வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. கிணறு இல்லாதன் காரணமாக குடிநீரினைப் பெற்றுக் கொள்வதில் மாணவர்கள் சிரமங்களை எதிர்நேக்குகின்றனர். (122)



கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன்பாடசாலைக் கொட்டகைகள்

# வலய மட்டத்திலான நாடகப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நலத்திட்டத்தின் கீழ் - யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட நாடகப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

நாடகங்கள் யாவும் இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளது.

தரம் 3 - 5 வரை கீழ்ப்பிரிவாகவும், 6-11 மேற்பிரிவாகவும் தரம் பிரிக்கப்பட்டுள்ளது.

நாடகங்கள் - சிறுவர் உரிமைகள், உரிமை மீறல், சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய கருத்தை வெளிப்படுததுபவையாக இருத்தல் வேண்டும்.

வலய மட்டத்திலிருந்து இரண்டு நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டு, பரிசில்கள் வழங்கப்படும்.

வலய மட்டப் போட்டிகள் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளது.

31.07.04 தென்மராட்சி வலயம்- சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், 01.08.04 தீவக வலயம் - ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், வலிகாம வலயம் - இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும்.

07.08.04 வடமராட்சி வலயம் - வட இந்து மகளிர் கல்லூரியிலும், 08.08.04 யாழ். வலயம் - செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. இந்த விடயம் சம்பந்தமான சுற்று நிருபம் - சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (122)

### வடமராட்சி - கிழக்கில் சுகாதார நிலையங்கள்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. சுகாதார வசதிகள் மிகவும் குறைந்த இந்தப் பிரதேசத்தில் உடுததுறை, மாமுனை ஆகிய கிராமங்களில் இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (122)

# முற்றவெளியில் கொட்டப்படுகின்ற கழிவுகளிலிருந்து துர்நாற்றம்

யாழ். நகரப்பகுதயில் உள்ள கடைகளின் கழிவுகள் மற்றும் நகரப் பகுதியில் உள்ள கழிவுகள் என்பன யாழ்.மாநகரசபையினரால் எடுத்து வரப்பட்டு, முற்றவெளிப் பகுதியில் கொட்டப்பட்டுள்ளமையால், அந்தப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதாக மக்கள் மத்தியில் பெரும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் கொட்டப்படும் கழிவுகளால் ஏற்படும் துர்நாற்றம்- வீதியால் பயணிப்போர் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

மேலும் இந்தக் கழிவுகள் - மீன் சந்தை மற்றும் இறைச்சிக்கடைகள் உள்ள பகுதியின் அண்டியே கொட்டப்படுவதனால், அங்கு வரும் பெருந்திரளான மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

யாழ்.நகரப் பகுதியிலிருந்து மாநகரசபை சுத்திகரிப்பாளர்களின் சிறுவண்டில்கள் மூலம் நாளாந்தம் இங்கு கழிவுகள் கொட்டப்பட்டு வருகிறது.

இதேவேளை, இந்தக் கழிவுகளை உழவு இயந்திரங்கள் மூலம் நாளாந்தமோ அன்றி இரு நாட்களுக்கொருமுறையேனும் வேறு இடங்களுக்கு முழுமையாக இடமாற்றாமையினாலேயே பெரும் துர்நாற்றம் வீசுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (113)

# வறிய மாணவர்களுக்கு சுகாதாரப்பொதி வழங்கல்

(மானிப்பாய்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையால், மானிப்பாய் ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் 12 மணியளவில் 125 வறிய குடும்பங்களுக்கு சவர்க்காரம், பற்தூரிகை, பற்பொடி உள்ளிட்ட சுகாதாரப் பொருட்கள் அடங்கிய 'சுகாதாரப் பொதிகள்' வழங்கப்பட்டன.

பிரதேச சபையின் செயலாளர் பி.விக்டர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக, யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. இராசையாவும், சிறப்பு விருந்தினர்களாக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.விஜயகுமாரி, மானிப்பாய் பதில் சுகாதார வைத்திய பொறுப்பதிகாரி வி.கே.வர்ணநாதன், மானிப்பாய் பிரதேசசபையின் உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஸ், பொது சுகாதாரப் பரிசோதகர் தயாமோகன் ஆகியோர் பங்குபற்றி இந்தச் சுகாதாரப் பொதிகளை வழங்கினார்கள் (100)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர் :ஜெ.டிலக்ஷன்
முகவரி : 34, பற்றிக்ஸ் வீதி, குருநகர்.

ஏழாவது அகவையில்



பெயர் : பா.மதனீதா
முகவரி : பிரம்படி லேன், கொக்குவில்.


# கடற்கரை வீதி புனரமைப்பு தாமதம் போக்குவரத்துக்கு பெரும் இடர்பாடு

மருதங்கேணிப் பிரதேசத்தில் உள்ள கடற்கரை வீதிகளைப் புனரமைப்பதில் காலதாமதம் ஏற்படுவதன் காரணமாக, இந்த வீதியினூடாகப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையிலான வீதியைப் புனரமைப்பதற்கு நிகொட் நிறுவனம் நிதியுதவி வழங்கி, வேலைகள் நடைபெற்று வருகிறது.

ஆனால் கல்லினால் புனரமைக்கப்படவேண்டிய வீதிகள் இன்னமும் புனரமைக்கப்படாமல் உள்ளன. கற்கள் பறித்து நீண்டகாலமாகியும் இன்னமும் புனரமைக்கப்படும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

குறிப்பாகச் செம்பியன்பற்று தொடக்கம் வத்திராயன் வரையில் உள்ள கல்லினால் புனரமைக்கப்படவேண்டிய வீதிகள் இன்னமும் புனரமைக்கப்படவில்லை.

வத்திராய்ன், மருதங்கேணி கடற்கரை வீதிகளில் காணப்படும் பாலங்களின் வேலைகளும் பூர்த்திசெய்யப்படாமல் அரைகுறையாகவுள்ளன.

இதேவேளை, களியினால் போடப்படும் வீதிவேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. (122)

### ஞானவைரவர் அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு- கெருடாவில் ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் - எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளதாக, ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் இந்த அலங்கார உற்சவத்தின் இறுதிநாள் நிகழ்வுகளில், சிறப்பு நிகழ்வாக - அன்றையதினம் இரவு மேளக்கச்சேரியும், கெருடாவில் இளைஞர்களின் இசைக்கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :----------------------------

முகவரி :----------------------------

பிறந்த ஆண்டு:----------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------------------
பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை*

திருக்குறள்

# நமது நோக்கு

## கருணாவின் சகாக்களின் கொலையும் ; அது எழுப்பியுள்ள சந்தேகங்களும்:

நேற்று முன்தினம் கொழும்பின் புறநகர்ப் பகுதியான கொட்டாவவிலுள்ள அத்துருகிரிய பகுதியில் உள்ள இரகசிய பாதுகாப்பு மறைவிடம் ஒன்றில் தங்கியிருந்ததாகக் கூறப்படும் கருணாவின் முக்கிய சகாக்கள் 7 பேரும், மற்றொருவருமாக எட்டுப்பேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமானது, நாடெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள அதே சமயம் பல்வேறு சந்தேகங்களையும் எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கொல்லப்பட்டவர்களும், கொன்றவர்களும் கருணாவின் சகாக்கள் என்பது ஒருபுறமிருக்க கொன்றவர்கள் தப்பிச்சென்று விடுதலைப்புலிகளிடம் சரணடைந்தமைதான் இச்சம்பவத்தில் முக்கிய அம்சமாகும்.

தாங்கள் இக்கொலைகளை செய்ய அவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுதான் காரணம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது.

எனவே, கருணாவின் சகாக்களிடையே ஒருவரையொருவர் கொன்றழிக்கும் அளவிற்கு, கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றது என்பது இதன்மூலம் தெளிவாகியுள்ளது.

கொலைசெய்யப்பட்டவர்கள் கொழும்பின் புறநகர்ப் பகுதியில் பாதுகாப்பாக மறைந்து இரகசியமாக செயற்படுவதற்கான இடத்தை அவர்களுக்குப் பெற்றுக்கொடுத்தது யார்? அவர் எந்த அடிப்படையில் அல்லது எந்தப் பின்னணியில் இவர்களுக்கு அடைக்கலம் அல்லது பாதுகாப்பை வழங்கினார்?

கொல்லப்பட்டவர்கள் இருந்த இடம் பாதுகாப்பான இரகசிய இடம் என்றால் அது எப்படி கொலையாளிகளுக்குத் தெரிந்தது. எப்படி அந்த மறைவிடத்தினுள் ஆயுத பாணிகளாக நுழைந்து அவர்களைக் கொன்றுவிட்டு தப்பிப்போக முடிந்தது?

கொல்லப்பட்ட எண்மரில் ஒருவர் தம்மிக என்ற சிங்களவர் என்பது தெளிவாகியுள்ளது. தமிமிக இராணுவ புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர் என வெளியான செய்தியை இராணுவத் தரப்பு மறுத்தாலும், அவர் யார் என்பதை இன்னமும் விசாரணையாளர்கள் தெளிவுபடுத்தவில்லை.

கொல்லப்பட்ட ஏனையோர் அனைவரும் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றாலும், உடன் யார் யார் என இனம் காணப்பட்டுள்ளபோது தம்மிகவை இனங்காணுவதில் தாமதம் ஏற்படக்காரணம் என்ன?

அவர் இராணுவ புலனாய்வுப் பரிவைச் சேர்ந்தவர் என்பதை மறைக்க கால அவகாசம் தேவைப்படுகிறதா? சரி, கொல்லப்பட்ட கருணாவின் ஆட்களுக்கும் அவருக்கும் என்ன தொடர்பு? தம்மிகவும் கருணாவின் சகாக்களுடன் இணைந்து செயற்பட்டவரா? அல்லது கருணாவின் ஆட்கள் தம்மிகவின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கினரா?

அத்துருகிரிய என்ற பெயர் கடந்த காலங்களில் மிகவும் பிரபலமான செய்திகளில் பரபரப்பாக அடிபட்ட இடமாகும். அத்துருகிரிய, மிலேனியம் சிற்றியில் அமைந்திருந்த இராணுவப் புலனாய்வுப் பரிவினரின் ஆழ ஊடுருவித் தாக்குதலை மேற்கொள்ளும் LRRP (Long Range Recce Petrol) குழுவினரின் இரகசியப் பாதுகாப்பு மறைவிடம் குறித்த விவகாரம் ஐ.தே முன்னணியினரின் ஆட்சிக்காலத்தில் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒன்றாகும்.

இங்கிருந்து இராணுவப் புலனாய்வுப் பரிவினரின் நெறிப்படுத்தலில் செயற்பட்ட தமிழ் குழுக்களைச் சேர்ந்தவர்கள் வட-கிழக்கு காட்டுப் பிரதேசங்கள் ஊடாக ஊடுருவி விடுதலைப் புலிகளின் முக்கிய பொறுப்பாளர்களை இலக்கு வைத்து தாக்குதலை நடத்தினர் என்பதும குறிப்பிடத்தக்கது.

இப்போதும் கொட்டாவ- அத்துருகிரிய பகுதியில் அமைந்துள்ள இரகசிய மறைவிடம் ஒன்றில் வைத்தே இந்த எண்மரும் கொல்லப்பட்டுள்ளமையானது கருணா கும்பலுக்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குமிடையேயான தொடர்பு குறித்த குற்றச்சாட்டுகளை ஊர்ஜிதம் செய்வது போலவே அமைந்துள்ளதாக ஆய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

எதுவானாலும், கருணாவுக்கும் அவரது சகாக்களுக்கும் அரசும், அரச படையினரும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் பாதுகாப்பும், ஆதரவும் அளித்து வருகின்ற விடயத்தை அண்மைக்கால சம்பவங்கள் ஒவ்வொன்றும் நிரூபித்தே வருகின்றன.

கருணா மட்டக்களப்பிலிருந்து கொழும்பு செல்வதென்றால், அங்கு தங்கி நிற்பதென்றால் அவர் அமைச்சர் டக்ளஸ் உடன் அடிக்கடி தொடர்புகொண்டு பி.பி.சி.க்கு பேட்டி வழங்குவதென்றால், பின் அங்கிருந்து உரிய பயண ஆவணங்களைப்பெற்று விமானம் மூலம் அமைச்சர் ஒருவருடன் சிங்கப்பூருக்கும் பயணிப்பதென்றால்... அரசுக்கும் கருணாவுக்கும் நெருக்கமான உறவுகள் இருக்காமல், ஜனாதிபதியின் அங்கீகாரமும் அதற்கு வழங்கப்படாமல் இவை எதுவுமே சாத்தியமாகாது என்பதை சாதாரண மக்களும் அறிவர்.

அத்துருகிரிய விவகாரமும் கருணாவின் சகாக்களின் படுகொலையும் எழுப்பும் கேள்விகளுக்கான சரியான பதில் உறுதிசெய்யப்படும் போது கருணா தொடர்பான அரசினதும், படைத்தரப்பினதும் அறிக்கைகளும் மறுப்புகளும் அர்த்தமற்றவை, பொய்யானவை என்பதும் சமாதானம் தொடர்பான அரசின் நேர்மையீனமும் உலகால் உணரப்படவே செய்யும்.

## நாடும் நடப்பும்




# வேலையற்ற பட்டதாரிகளுக்கு சத்தியக்கூற்று விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுகின்றன!

யாழ்.மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான சத்தியக்கூற்று விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

வேலையற்ற பட்டதாரிகளை பொருத்தமான அரசதுறைகளில் பயிலுனர்களாக இணைத்துக் கொள்வதற்காக அந்தந்தப் பிரதேச செயலகங்களில் கடந்த மாதம் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

அவ்வாறு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு, கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நிதியமைச்சால் பரிசீலிக்கப்பட்டு கணினிமயப்படுத்தப்பட்டிருந்தன.

அவ்வாறு கணினி மயப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் அரச மற்றும் தனியார் துறைகளில் நிரந்தரத் தொழில்களில் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்தும் முகமாகவே இந்த விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை முதல், யாழ். மாவட்டத்தில் உள்ள பட்டதாரிகளுக்கு இந்த விண்ணப்பப்படிவங்கள் தபாலகங்களினூடாக கிடைக்கப் பெறுகின்றபோதிலும் பெருந்தொகையானோருக்கு அது கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு சமாதான நீதிவானூடாக உறுதிப்படுத்தப்பட்டு நிதியமைச்சுக்கு அனுப்பப்படவேண்டிய இந்தக் கடிதம் கிடைக்கப்பெறாதோர், யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்குச் சென்று தமக்கு விண்ணப்பம் கிடைக்காமை தொடர்பாக முறையிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# 10 ஆயிரம் குளங்களை புனரமைத்து நெல் உற்பத்தியை அதிகரிக்கலாம்

### அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே தெரிவிப்பு

நாட்டில் ஆரம்பிக்கப்படவுள்ள 10 ஆயிரம் குளங்கள் புனரமைக்கும் திட்டத்தின் மூலம் நெல் உற்பத்தியை 30 வீதத்தால் அதிகரிக்கமுடியும் என, வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது -

10 ஆயிரம் குளங்கள் புனரமைக்கும் திட்டத்தின் மூலம் ஒரு மில்லியன் ஏக்கர் நிலங்களில் நெற்பயிர்ச்செய்கையை விருத்தி செய்ய முடியும். இதன்மூலம் எமது நாட்டில் தன்னிறைவுப் பொருளாதாரத்தினை உருவாக்க முடியும்.

எமது நாட்டின் நெல்லைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியும். எந்தவொரு வெளிநாட்டுக்குச் சென்றாலும், அங்கு நாம் சீனி, கோதுமை, அரிசி போன்றவற்றை உதவியாகக் கேட்கும் நிலையே தற்போது உள்ளது.

இந்த நிலையை மாற்றும் நோக்குடனேயே 10 ஆயிரம் குளங்கள் புனரமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனத்தெரிவித்தார்.

# தேசிய அடையாள அட்டைகள் கிடைத்ததும் விநியோகிக்கப்படும்

### செயலக வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் தேங்கிக் கிடந்த தேசிய அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றதும் துரிதமாக அவை யாழ்.மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு விநியோகிக்கப்படுமென யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து அந்தவட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில், வவுனியாவில் கடந்த பத்து மாதகாலமாக தேங்கிக் கிடந்த யாழ்.மாவட்ட மக்களுக்கான 2500 தபால் பொதிகள் விமானம் மூலம் எடுத்து வரப்படவுள்ளது.

இந்தப் பொதிகள் இந்த மாதம் இறுதியிலும், அடுத்தமாதத் தொடக்கத்திலும் இங்கு வந்து சேரவுள்ளது.

அவ்வாறு அவை வந்து சேர்ந்ததும் எதிர்வரும் 10 ஆம் திகதியளவில் யாழ் மாவட்ட மக்களுக்குச் சொந்தமான அடையாள அட்டைகள் யாழ். செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவுத் திணைக்களத்தினூடாக விநியோகிக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்திலிருந்து அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து, கடந்த 10 மாதகாலமாக அவை கிடைக்கப் பெறாமையால் யாழ்.செயலக அதிகாரிகள் பல்வேறு சிரமங்களையும், மன உளைச்சல்களையும் அனுபவிக்க நேர்ந்ததாகவும், இந்த அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டால் தமது பெரும் பிரச்சினை தீர்ந்துவிடும் எனவும் யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ப)

# டக்ளஸின் அமைச்சுக்கு கட்டடம் கொடுத்தமைக்கு உரிமையாளர் எதிர்ப்பு

உல்லாசப் பயணத்துறை அமைச்சு இயங்கிவரும் கட்டடத் தொகுதியில் டக்ளஸ் தேவானந்தாவின் இந்து கலாசார அமைச்சுக்கு இடம்வழங்கப்பட்டமை தொடர்பாக அந்தக்கட்டடத்தின் உரிமையாளர் எதிர்ப்புத் தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது காரியாலயத்தை அநுரா பண்டாரநாயக்காவின் அமைச்சுக் கட்டடத்திற்கு மாற்றியதன் காரணமாகவே இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது.

உல்லாசப் பயணத்துறைக்கு மாத்திரமே அனுமதிக்கப்பட்டுள்ள தனது கட்டடத் தொகுதியில், இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்கு இடம் வழங்கப்பட்டமை காரணமாக கட்டடத் தொகுதிக்கு கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரம் அந்தக் கட்டடத்தை வாடகைக்குப் பெறுவது தொடர்பாக தனக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீறும் செயலெனவும், சுட்டிக்காட்டியுள்ள கட்டட உரிமையாளர், குறித்த கட்டடத் தொகுதியில் இருந்து உல்லாசப் பயணத்துறை அமைச்சை வெளியேறிச் செல்லுமாறும் உல்லாசப் பயணத்துறை அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கொழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தவும்

### பயங்கரவாத தடுப்புப் பிரிவின் சிரேஷ்ட உத்தியோகத்தர் தெரிவிப்பு

புலிகள் கொழும்பு நகரில் பாதுகாப்பான இல்லங்களில் தங்கியிருந்து கொண்டு, நடத்தும் தாக்குதல்களை நிறுத்த வேண்டுமானால், கொழும்பு மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என, பயங்கரவாத தடுப்புப் பிரிவின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் மிகவும் பாதுகாப்பற்ற ஒரு நிலை தோன்றியிருப்பதாகவும், கொலையாளிகள் அனைத்து இடங்களிலும் நடமாடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

25 பேரைக் கொண்ட புலி உறுப்பினர்களின் குழுவொன்று கருணாவைத் தேடி கொழும்புக்கு வந்துள்ளதாகவும், கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலவிய போர்நிறுத்த ஒப்பந்தம் மீண்டும் செயற்படுத்தப்பட்ட போது, புலி உறுப்பினர்கள் கொழும்புக்கு ஊடுருவியதாகவும் தெரிவித்த அவர்,

கொட்டாவ பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொலைச் சம்பவத்தை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பொறுப்பேற்க வேண்டும்.

நடைபெற்ற இந்தக் கொலைச்சம்பவம் தொடர்பாக, முதலில் செய்தியை வெளியிட்டது புலிகளின் இணையத்தளமே.

போர்நிறுத்த ஒப்பந்தம் காரணமாக பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை எதுவும் இடம்பெறவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

- ஆர்கே.மேனன்

# கலாசாரச் சீரழிவுகள் தொடர்பாக சமூகம் விழிப்படைதல் வேண்டும்

**எப்படியும் வாழலாம் என்ற ஒரு நிலை மானிடப் பிறப்புக்கு கொடுத்தருந்தால், அந்த ஆண்டவனே ஆறாவது அறிவைப் பறித்திருக்கலாம். இபபடித்தான் வாழவேண்டும் என்று சில வரன்முறைகள் மனிதனுக்கு உண்டு. தாய்ப்பாசம், சகோதரபாசம், புனிதமான காதல், இரக்க சுபாவம் இத்தனையோடும் பரிணமிக்கப்பட்ட ஒரு கட்டுக்கோப்பு வாழ்க்கைதான் தமிழனின் கலாசாரம். இதை யாரும் மறந்துவிடக் கூடாது.**

இன்று எமது சமூகத்தில் பல்வேறு கலாசாரச் சீரழிவுகளும், அதனால் உருவாகின்ற பல்வேறு கவலைக்குரிய நிகழ்வுகளும், நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. ஆகவே, இந்தக் கலாசாரச் சீரழிவுகள் பற்றி இன்றைய எமது சமூக அங்கத்தவர்களுக்கு தெளிவாக கப்படவேண்டிய தேவை ஒவ்வொரு ஊடகங்களுக்கும் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது.

அந்த வகையில் முதலில் நாம் கலாசாரம் என்றால் என்ன என்பது பற்றி ஆராய்வோம். இந்த சொற்பதத்துக்குள் சமயம், ஒழுக்கம், சாதி, உணவு, உடையமைப்பு, நாகரீக வளர்ச்சி, அபிவிருத்திப் போக்கு, உளநிலைகள் போன்ற பல்வேறு அம்சங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

அந்த வகையில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற ஒழுக்க கோவைக்குள் இருந்து எண்ண அலைகளின் ஒருமைப்பட்ட செயற்பாடுகள் மூலம் வீரத்தமிழன், இலட்சியத்தமிழன், தலைநிமிர்ந்த தமிழன், பொற்காலசோழர் ஆட்சி என்ற பல நற்பெயர்களை எடுத்தான். அன்றைய தமிழன், தமிழனின் பண்பாட்டையும், கலாசாரத்தையும் கண்ட அந்நிய தேசமே வாயில் விரல் வைத்த காலம் இன்று மலையேறிவிட்டது.

எப்படியும் வாழலாம் என்ற ஒரு நிலை மானிடப் பிறப்புக்கு கொடுத்திருந்தால், அந்த ஆண்டவனே ஆறாவது அறிவைப் பறித்திருக்கலாம். இபபடித்தான் வாழவேண்டும் என்று சில வரன்முறைகள் மனிதனுக்கு உண்டு. தாய்ப்பாசம், சகோதரபாசம், புனிதமான காதல், இரக்க சுபாவம் இத்தனையோடும் பரிணமிக்கப்பட்ட ஒரு கட்டுக்கோப்பு வாழ்க்கைதான் தமிழனின் கலாசாரம். இதை யாரும் மறந்து விடக்கூடாது.

உளவியலின் மனமாற்ற வழிமுறைகள் என்று ஒன்று தேவைதான். நாகரிகவளர்ச்சி என்று ஒன்று தேவைதான். பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல்ல என்ற அம்சமெல்லாம் தேவைதான். ஆனால், இவையெல்லாம் கலாசார சீரழிவுகளுக்கு வித்திடக்கூடாது.

இன்று எமது சமூகத்தில் பல்வேறு காரணங்களால் ச்மூகம் சீரழிந்து கொண்டிருக்கின்றது என்பதை பல ஊடகங்கள் மூலம் அறிகின்றோம். அவை அறிக்கைப் படுத்தும் சமூக சீரழிவுக்கான அம்சங்களாவன.

1) அண்மையில் வந்த ஒருசில திரைப்படங்கள்.

2) ஏ-9 வீதி திறப்பின் பின்னால் ஏனைய கலாசாரங்கள் ஒன்றிணைந்தமை.

3) அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட சில புற தாக்கங்கள்.

எனப் பட்டியற்படுத்தப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக கலாசாரத்தில் பங்கெடுக்கின்ற மானிட வர்க்கத்தை இரண்டு பகுதிகளாக பிரித்து இங்கு ஆராய்வோம்.

☆ பதினெட்டு வயதுக்கும் ஆறு வயதுக்கும் உட்பட்டோரால் ஏற்படுகின்ற கலாசார சீரழிவுகள்

சுயமதிப்பு, சுயசிந்தனை, சுய நடத்தைக்கோலம் என்று எதுவும் இல்லாது சாதரணமாக இன்னொருவரில் தங்கி வாழுகின்ற பருவம் இது. இவர்களால் ஏற்படுகின்ற கலாசார சீரழிவுகளுக்கு உண்மையில் இவர்களை குற்றம் சொல்வது தவறு. அந்த வகையில் இவர்களது நடத்தையில் பெருமளவு பங்கெடுக்கின்ற பெற்றோர்களை முதலில் எடுத்து நோக்குவோம்.




## பெற்றோர்களினது கண்காணிப்பு

இன்றைய இயந்திர உலகத்தில் பிள்ளைகளது நடத்தைகளை பெற்றோர்கள் அவதானிக்கின்றார்களா? என்றால் அது ஒரு கேள்விக்குரிய விடயம். வளர்ந்து கொண்டு வருகின்ற ஒரு சமூகத்தில் எதிர்த்துப் போராட வேண்டிய தேவை காரணமாக இருவரது வேலைப் பழுக்களும் அதிகரிக்கிறன. இதனால், பிள்ளைகள் எங்கு செல்கின்றனர். யாரோடு பழகுகின்றனர். எப்படியான நட்புக்கள் இருக்கின்றன. எப்படியான சூழலில் அவன் வாழ்கின்றான், என்னென்ன எதிர்பார்ப்புகள் அவனுக்கு இருக்கின்றன என்ற பல்வேறு அம்சங்களை பெற்றோர்கள் கவனிக்காது தவறிவிடுகிறார்கள்.

இதனால், பிள்ளை ஒரு முரண்பட்ட சமூக கட்டமைப்பில் வாழ ஆரம்பிக்கின்றது. பிள்ளையின் வளர்ச்சியோடு உணர்ச்சிப் போக்கும் வளர்ச்சியடைய எதுசரி, எதுபிழை என்று தெரியாது தனது உணர்ச்சிகளுக்கு உருவம் அளிக்க ஆரம்பிக்கும் போது சமூகச் சீர்கேடுகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் மேலெழுகின்றன.

ஆகவே, வளரும் பிள்ளைகளுக்கு நிச்சயமாக பெற்றோரது கண்காணிப்பு என்பது இன்றியமையாததொன்றாகும். பிள்ளையின் எதிர்கால நலனில் அக்கறை கொண்ட எந்தப் பெறறோரும், வேலைப்பழு இருந்தாலும் முக்கியமாக பிள்ளை வளரும் சூழலை இனங்கண்டு, திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும். சிறுவயதிலே சரியான பாதையிலே புடமிடப்பட்டு எது சரி, எதுபிழை என்கின்ற எண்ண அலைகள் மேலோங்குகின்ற போது, நிச்சயம் பிள்ளை தவறான வழிக்குச் செல்லாது. ஆகவே, இக்காலசார சீரழிவுக்கான வகை கூறவேண்டிய தேவையில் பெற்றோர்கள் முக்கிய பங்கெடுக்கின்றார்கள்.

## சகபாடிக் கொண்டாட்டங்கள்

பிள்ளையினது ஆளுமை விருத்தியில் இதுவே முக்கிய பங்கெடுக்கின்றது. இன்று சில இளைஞர்கள் மத்தியில் மதுபானம் அருந்துதல் என்பதும் "இது தனக்கு துறைபோன விடயம்" என்று கூறுதலும் சன நடமாட்டத்தின் மத்தியில் நின்று புகைத்தல் மேல் நாகரீகம் என்ற எண்ணக் கருவாக மேலோங்கி இருக்கின்றது. இதனால் இவற்றை அருந்தாத, அருந்திப் பழக்கமற்ற ஒரு சிலரை நாகரிகமற்றவர்கள் என்று ஒதுக்க அவர்கள் ஒதுங்கி நிற்கின்றனர். அவர்கள் இந்த மனமுரண்பாட்டில் இருந்து விடுபட, தமது சக பாடி கொண்டாட்டப் பிரதிநிதித்துவத்தை தெளிவுபடுத்த அவனும் மதுபானம் அருந்த ஆரம்பிக்கின்றான். சிறுபிள்ளைத் தனமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த விளையாட்டு, பின்பு அதை நிறுத்த முடியாத பழக்கப்பட்ட மனநிலைக்கு உள்ளாகி அவனது வாழ்க்கையையும், கலாசாரத்தையும் சீரழிக்க ஆரம்பிக்கின்றன. ஆகவே, சகபாடிகளை தேர்ந்தெடுகின்ற போதும், நாம் மிக அவதானமாக செயற்படுவோமாக இருந்தால், கலாசாரச் சீரழிவுகளிலிருந்து விடுபடமுடியும்.

## பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோரால் ஏற்படுகின்ற கலாசாரச் சீரழிவுகள்

இவர்களால் தான் மிக விபரீதமான கலாசார சீரழிவுகள் இன்றைய எமது சமூகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு மனிதனது வாழ்கையில் உணர்வுகள், சுதந்திரங்கள், சந்தோஷமான வாழ்க்கை என்பவற்றுக்கு மதிப்பளித்தல் வேண்டும். இவற்றைக் கட்டுப்படுத்துகின்ற போதுதான் அடிப்படை உளவியலில் விபரீதமான விளைவுகள் ஏற்படுகின்றன. ஆனால், ஒன்றை நாம் தெளிவாக புரிந்திருக்க வேண்டும். உணர்ச்சிகளை நாம் ஆளவேண்டும். உணர்ச்சிகள் எம்மை ஆளவிடக்கூடாது. உணர்ச்சிகள், சுதந்திரங்களுக்குத்தான் எமது சமூக கட்டமைப்பில் ஒவ்வொரு பருவங்கள் உள்ளன. இதற்காக பருவம் மாறி பயிரிடுகின்ற போது பாதிப்புகள் எம்மையே வந்தடையும்.

சமூகத்தோடு ஒன்றிணைந்த மனித வாழ்க்கையில் சமூக மதிப்பு, சமூக கணிப்பு, தனிப்பட்ட எமது கௌரவம் என்ற எண்ணக்கருக்கள் எமது மனதில் மேலோங்கி வளர்க்கப்பட்டிருந்தால், உடல் வளர்ச்சியால் வருகின்ற உணர்ச்சியை விட உள்ளத்து எண்ணங்கள் திடமாக இருக்கும். இது தப்பான வழிக்கு எம்மை வழி நடத்தாது. ஒவ்வொருவரும் சுயமாக சிந்தித்து பாருங்கள் கிடைக்காத ஒரு மானிடப் பிறப்பு இது என்பதை அறிவீர்கள். அதில் எத்தனையோ கடமைகள், எத்தனையோ உறவுகள், எமக்காக காத்திருக்கிறன. எமக்கென்று ஒரு கௌரவத்தை நாம் உருவாக்க வேண்டும். அடுத்தவன் தட்டிக் கேட்கின்ற நிலையில் எமது நிதானத்தை நாம் இழக்கக்கூடாது. அறிவில் வளர்ச்சி அடைந்த நாம். ஆளுமையில் விருத்தி அடைந்த நாம், எதுசரி, எதுபிழை என அறிந்த நாம், அற்ப உணர்ச்சிகளுக்காகவும், அற்ப புகழாசைக்காவும் எமது கௌரவத்தை இழக்கலாமா? இந்த எண்ணங்களும் எம்மில் அலை மோதுகின்ற போது திடகாத்திரமான ஒரு எண்ணக்கரு எம்மனதில் உருவாகும். இந்த எண்ணக்கரு பல்வேறு கலாசாரச் சீரழிவுகளுக்கு செல்லவிடாது எம்மைப் பாதுகாக்கும்.

இளைஞர், யுவதிகளிடத்தே பெரியதொரு கலாசாரச் சீரழிவுப் பிரச்சினை புனிதம் என்ற பெயரெடுத்து, காதல் உணர்ச்சிகளால் உருவாகின்றது. இது பற்றி சற்று ஆழமாக நோக்கவேண்டும். இந்த காதல் உணர்ச்சிகளே பெரிய உருவெடுத்து பாரிய கலாசாரச் சீரழிவுகளை உருவாக்குகின்றன. பள்ளிப் பருவத்தில் வருகின்ற காதல், காதலல்ல. பத்துப் பேர் பார்க்க நாம் காதலிக்க வேண்டுமென்பதற்காக உருவாவது. அது உண்மையான இளமையின் பூரணத்துவத்தோடு உருவாகி இருந்தால், அது பள்ளிப் பருவத்தில் உருவாகி இருக்காது. ஏனெனில், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளப் பருவம் போதாது. சாதாரண இளமையின் உந்துதல்களுக்கெல்லாம் எமது இளைஞர், யுவதிகள் புனிதமான காதல் என்ற பெயரைக் கொடுத்து பூகம்பமான சில கலாசார சீரழிவுக்கு வித்திட்டு விட்டு விலகி விடுகின்றனர்.

புனிதமான காதலாக இருந்தால் அது கலாசாரச் சீரழிவுக்குச் சென்றிராது. தயவுசெய்து இளைஞர், யுவதிகள் ஒன்று சிந்திக்க வேண்டும். பத்து மாதம் சுமந்து பெற்று, வளர்த்தெடுத்து பல கஷ்டங்களை அனுபவித்துப் படிக்கவைத்து, ஆளாக்கி விட்ட பாசமான பெற்ற உறவுகளை விட்டெறிந்து விட்டுப் புனிதமான காதல் என்று பூசித்தால் அது எப்படி நியாயமானது? எமது கௌரவம், எமது தனித்துவங்களைக் காத்து, சமூகத்துக்கு சேவை செய்து, எம[illegible]கென்று வருகின்ற உறவுகளை கண கலங்காமற்காத்து, வாழுகின்ற போக்குடையவனுக்கு இந்த சிறுபிள்ளைத் தனமான காதலே உண்மையில் ஒரு சமூகச் சீரழிவு தான். திரைப்படங்களைப் பார்க்கின்றோம். சுயசிந்தனையற்று, அதன் படி வாழ ஆசைப்படுகின்றோம். இது எப்படி நியாயமானது. லௌகீக வாழ்க்கை எங்கே! பணத்துக்காகவும், புகழுக்காகவும் தயாரிக்கப்படுகின்ற திரைப்பட கலாசாரம் எங்கே? ஜப்பானை எடுத்துக்கொண்டால் 4 வரித் தேசிய கீதம் அவர்களுக்கு அதைப் பாடவே நேரமில்லை. அபிவிருத்தி, உற்பத்தி, முன்னேற்றம் என்பதே அவர்களது சிந்தனையாக உள்ளது.

ஆனால், இங்கு நாமோ திரைப்படம் போல வாழ ஆசைப்படுகின்றோம். இது எவ்வளவு கேவலம்! சற்று சிந்தித்துப் பாருங்கள். ஏ-[illegible] வீதி திறந்தவுடன் அடுத்த கலாசாரங்கள் கலக்க அவர்களைப் போல வாழ ஆசைப்படுகின்றோம். அவர்களது நல்ல செயற்பாடுகளைப் பின்பற்றுவது தப்பல்ல. ஆனால், நாமோ அவர்களின் தீய பழக்கவழக்கங்களை மேல் நாகரீகம் என்றல்லவா பின் பற்றுகிறோம்! இது எல்லாம் பல வீணப்பட்ட ஆளுமைகள் என்றே ஒரு புறத்தில் சிந்திக்க வேண்டும். "எனது நிலை எனக்குப் போதும், எனது தனித்துவத்தை நான் பேண வேண்டும்" எனது கௌரவத்தை பேணவேண்டும்.

என்றெல்லாம் சிந்தித்தோமானால் அடுத்தவனது பிழையான நடததைகளைக் கண்டு ஏமாறமாட்டோம். தயவுசெய்து உங்களது நிலையை உங்களது கௌரவத்தைப பேணுங்கள். தமிழனுக்கென்று தனிததுவமான கலாசாரம் உண்டு. அவற்றை நாமே பேணவேண்டும். சீரழிவுப் பாதைக்கு இட்டுச் செல்ல சமூகக் கடமைப்பாடு உள்ள யாருமே இடங் கொடுக்க மாட்டார்கள்! ❄

**ஒவ்வொருவரும் சுயமாக சிந்தித்து பாருங்கள் கிடைக்காத ஒரு மானிடப் பிறப்பு இது என்பதை அறிவீர்கள். அதில் எத்தனையோ கடமைகள், எத்தனையோ உறவுகள், எமக்காக காத்திருக்கிறன. எமக்கென்று ஒரு கௌரவத்தை நாம் உருவாக்க வேண்டும். அடுத்தவன் தட்டிக் கேட்கின்ற நிலையில் எமது நிதானத்தை நாம் இழக்கக்கூடாது.**

யாழ்ப்பாணம

டார்பூர் பிரச்சினைக்குத் தீர்வுகாண

# சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்ற சூடானிய அரசாங்கம் தயாராக இருக்கிறதாம்!

## ஜனாதிபதி ஓமர் அல்பசீர் தெரிவிப்பு



டார்பூர் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றத் தயாரென சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பசீர் அறிவித்துள்ளார்.

சூடான் மக்களும், அரசாங்கமும் டார்பூர் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முழுத் தகுதியுடையவர்களாக இருக்கின்றனர். அத்துடன், ஆபிரிக்க யூனியனுடனும், சர்வதேச சமூகத்துடனும் இணைந்து இந்தப் பிராந்தியத்திலுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண நாம் மிகவும் விருப்பத்துடன் இருக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜான்ஜாவீட் ஆயுதக் குழுவுக்கான உதவிகளை நிறுத்துவதாக சூடான் அரசு முன்னர் அளித்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டுமென சர்வதேச சமூகம் கொடுததுவரும் அழுத்தத்திற்குப் பின்னரே சூடான் ஜனாதிபதி மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றிய அமைச்சர்கள் புருஸ்லெஸ்ஸில் நேற்றுக்கூடி சூடானின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தனர்.

தற்போதைய நிலைமையைத் சுமுக நிலைக்கு கொண்டுவராவிட்டால் சூடான் அரசிற்கான எந்தவொரு உதவியும் வழங்கப்படமாட்டாதென ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக காவும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

சூடான் அரசாங்கமும், கிளர்ச்சிவாதிகளும் மீளவும் பேச்சுக்களைத் தொடங்கி, நிலைமையைச் சுமுகமாக்குவதுடன், சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவிப் பணிகளையும் மேம்படுத்த வேண்டுமென ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, ஈராக்கில் நிலவும் தற்போதைய நெருக்கடியைப் போல சூடானிலும் கலவரத்தை ஏற்படுத்த அமெரிக்கா முயல்வதாக சூடானின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

டார்பூர் பிரதேசத்தில் பொதுமக்களின் உயிரிழப்புகள் தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகவும், எனவே அங்கு நிலைமைகளை அவசரமாக மேம்படுத்தவேண்டியுள்ளதாகவும் ஐ.நாவின் மனிதாபிமான உதவிப் பணிகளின் இணைப்பாளர் ஜோன் எக்லன்ட் தெரிவித்தார்.

அவதியுறும் மக்களுக்கு சர்வதேச நாடுகள் மேலதிக உதவிகளை வழங்கவேண்டுமென உதவி நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் மைக்கல் பானியர் மூன்று நாள் விஜயமாக சூடான் மற்றும் சாட் நாடுகளுக்குச் செல்லவுள்ளார்.

இவர் தற்போதைய சூழ்நிலையை சுமுக நிலைக்குக் கொண்டுவருமாறு சூடான் அரசாங்கத்தை நிரப்பந்திப்பா ரென எதிர்பார்க்கப்படுகிறது.

# குரங்கு மனிதனின் சாகசம்



உயரமான கட்டிடங்களைப் பார்த்தால் 41 வயது அலன் ரொபேட் அதை விடுவதில்லை. உடனடியாக அந்தக் கட்டிடத்தின் சுவரைப் பிடித்துக்கொண்டே அதன் மீது ஏறிவிடுவார். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அலன் ரொபேட இந்தோனேஷியாவின் ஜகார்த்தா நகரில் 120 மீற்றர் உயரமான கட்டடத்தின்மீது, சுவரிலுள்ள ஆணிகளைப் பிடித்துக்கொண்டு வேறு எந்தக் கருவியின் உதவியுமின்றி ஏறினார்.

25 மாடிகளை அவர் 30 நிமிடங்களில் ஏறிக் கடந்துவிட்டார். இந்தச் சாதனையை நிகழ்த்திய அலன் ரொபேட்டை - ஸ்பைடர் மான என்றும், குரங்கு மனிதன் என்றும் அழைக்கிறார்கள். ஏற்கனவே சிக்காக்கோவில் சீயர்ஸ் கோபுரம், சிட்னியிலுள்ள ஓபேரா ஹோட்டல், ஈபிள் கோபுரம், நியூயோர்க்கிலுள்ள எம்பயர் ஸ்டெட் கட்டிடம் ஆகியவற்றின் மீதும் இந்தக் குரங்கு மனிதன் ஏறி சாதனை புரிந்திருக்கிறார்.

# தென்கொரியாவிலும் மணல் சிற்பக் கண்காட்சி

பிரேசில் நாட்டில் ஆண்டு தோறும மணற்சிற்பக் கண்காட்சி நடத்தப்படுவது வழக்கம். உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்து மணற் சிற்பக் கலைஞர்கள் பிரேசில வந்து விதம்விதமான மணற் சிற்பங்களை உருவாக்குவது வழக்கம். இந்த மணற்சிற்பக் கண்காட்சிபோன்று இப்போது தென்கொரியாவிலும் மணற் சிற்பங்கள்மீது மோகம் ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள ஹேன் நதி ஓரத்தில் மணற்சிற்பக் கண்காட்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆற்று



மணல்கொண்டு ஒரு சிற்பக்கலை மாணவர் சிற்பம் உருவாக்கும் காட்சி.

# சிறையிலிருக்கும் சதாம் ஹூசைன் ஆரோக்கியத்துடன் உள்ளாராம்

## ஈராக்கிய அமைச்சர் தெரிவிப்பு



(பாக்தாத்)

ஈராக்கில் அமெரிக்கப் படையினரின் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் ஈராக்கிய அதிபர் சதாம் ஹூசைன் சிறந்த உடல் ஆரோக்கியத்துடனும், வசதிகளுடனும், இருப்பதாக ஈராக்கிய இடைக்கால அரசின் மனித உரிமைகள் அமைச்சர் பஹிதார் அமின் தெரிவித்தார்.

சதாம் ஹூசைன் இருக்கும் சிறைக்குச் சென்ற ஈராக்கிய மனித உரிமைகள் அமைச்சர் - 'பிரிட்டன் கார்டியன்' பத்திரிகைக்குத் தகவல் தெரிவிக்கையில் -

மூன்று மீற்றர் அகலமும், நான்கு மீற்றர் நீளமும் உடைய குளிரூட்டப்பட்ட அறையில் சதாம் ஹூசைன தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும், அவர் ஊடகவியலாளர்களைச் சந்திப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சதாம் சிறைச்சாலையில் குர் ஆன் வாசிப்பதாகவும், வேறு புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளதாகவும் சிறையில் கவிதைகளை எழுதுவதாகவும் தெரிவித்தார்.

சதாம் தனது உணவு தொடர்பான விடயங்களில் கட்டுப்பாட்டுடன் இருப்பதோடு, தினமும் உடற்பயிற்சியும் செய்துவருகிறார்.

அத்துடன், அவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஷ் புஷ்ஷினைப் பற்றி ஒரு கவிதை எழுதியுள்ளதாகவும், தனக்கு அதனை வாசித்துப் பார்க்க நேரமிருக்கவில்லையெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆனாலும், சதாம் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக ஈராக்கிய மனித உரிமைகள் அமைச்சர் தெரிவித்தார்.

இதேசமயம் குறிப்பிட்ட ஈராக்கிய மனித உரிமைகள் அமைச்சரின குடுமப உறுப்பினர்கள் சதாமின் முன்னாள் படைகளால் கொலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் நடந்த தாக்குதலில் நான்கு பொதுமக்கள் பலி!

(ஸ்ரீநகர்)

இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷமீரில் இருவேறு இடங்களில் பிரிவினைகோரும் முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

காஷ்மீரில் பராமுல்லா மாவட்டத்தில், இடம்பெற்ற கிரனைட் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டதுடன், முப்பதுபேர் படுகாயமடைந்தனர்.

பொலிஸார் சென்றுகொண்டிருந்த வாகனம் மீதே கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியதாகவும், அது தவறி வீதியின் அருகே விழுந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ராஜ்கோரி மாவட்டத்தில் இடம்பெற்ற மற்றுமொரு கிரனைட் தாக்குதலில் பொதுமக்களை கிளர்ச்சிளார்



கள் கொன்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடத்தப்பட்ட கிரனைட் தாக்குதலில் மொகமட் சபி, அவரது மகன்கள் ஆகிய இருவர் கொல்லப்பட்டதுடன் அவரது மனைவியும் கடும்காயங்களுக்குள்ளானார்.

தங்களுக்கு இவர் தகவல் கொடுப்பவர் என்று சந்தேகப்பட்டே கிளர்ச்சியாளர்கள் இவர்மீது தாக்குதலை நடத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எந்தவொரு குழுவும் உரிமைகோரவில்லை.

இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகள், படையினர் மற்றும் அவர்களுக்குத் தகவல் கொடுப்போர்மீது தாக்குதல்களை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# துருக்கியில் மீண்டும் ரயில் விபத்து 15 பேர் பலி

துருக்கியில் கடந்த 5 நாட்களுக்கு முன் அங்காரா - இஸ்தான்புல் நகருக்கு இடையே சென்ற அதிவேக ரயில் தடம்புரண்டு நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். ஆனால், 39 பேர்தான் பலியானதாக அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இந்த விபத்துப் பற்றிய பரபரப்பு அடங்குவதற்குள் அங்கு இன்னொரு ரயில் விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்று துருக்கியின் மேற்குப்பகுதியில் ரெயில்வே கடவையை கடந்துசெல்லும் போது, அதன் வழியாகச்சென்ற ஒரு பஸ்மீது அதிவேக ரயில் மோதியது.

இதனால் அந்த பஸ் சுக்கு நூறாக நொருங்கியது. பஸ்ஸில் இருந்த பயணிகளில் 15 பேர் உடல் நசுங்கிப் பலியானார்கள்.

# திருமண வீட்டில் மொபைல் போன் கமரா ஏற்படுத்திய பரபரப்பு

சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாட் அருகேயுள்ள ஒரு கிராமத்தில் திருமண நிகழ்வு நடந்தது. அப்போது அங்கு திடீரென்று ரகளை ஏற்பட்டு பயங்கர மோதல் ஏற்பட்டுவிட்டது. இது மணமகன் - மணமகள் வீட்டாருக்கு இடையே நடந்த மோதலில்லை. திருமணத்துக்கு வந்த ஒரு பெண் தன்னிடம் இருந்த மொபைல் போன் கமராவை வைத்து மற்றைய பெண்களை படம் எடுத்து விட்டாராம். சவுதி அரேபியாவில் திருமண நிகழ்வுக்கு வரும் பெண்களை படம் எடுக்கத் தடையுள்ளது. இது தெரியாமல் அந்தப்பெண் தனது மொபைல் போனில் மற்றைய பெண்களின் முகத்தை படம் பிடித்துவிட்டார். இதனாலேயே அங்கு மோதல் ஏற்பட்டது.

# அல்கொய்டா கிளர்ச்சிவாதிகள் ஸ்பெயினுக்குள் செல்லக்கூடும்

## மொறோக்கோ அரசு எச்சரிக்கை



அல்கொய்டா தீவிரவாதிகளின் முகாம்களில் பயிற்சி பெற்ற மொறோக்கோ நாட்டு இளைஞர், யுவதிகள் ஸ்பெயின் நாட்டிற்குள் நுழையக்கூடும் என - மொறோக்கோ அரசு, ஸ்பெயின் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாக ஸ்பெயின் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

ஆப்கானிஸ்தான், பொஸ்னியா மற்றும் செச்சினியா ஆகிய நாடுகளில் உள்ள அல்கொய்டாத் தீவிரவாதிகளின் முகாம்களிலிருந்து 600 மொறோக்கோ நாட்டுப் பிரஜைகள் பயிற்சிகளை முடித்து வெளியேறியுள்ளதாகத் தெரிவித்துள்ள மொறோக்கோ அரசு - இவர்களில 400 பேர் எங்கு சென்றுள்ளார்கள் என்பது பற்றிய செய்தி இதுவரை தெரியவரவில்லை எனத் தெரிவித்துள்ளது.

அல்கொய்டாத் தீவிரவாதிகளுக்கு எதிரான, நிபுணத்துவம் வாய்ந்த விசாரணை அதிகாரி ஒருவர் யுலைமாத ஆரம்பத்தில் கலந்துகொண்ட அல்கொய்டாத் தீவிரவாதிகள் தொடர்பான புலனாய்வுக் கூட்டம் ஒன்றில் இது தொடர்பான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மொறோக்கோ அரசு தெரிவித்தது.

இது தொடர்பாகக் கருத்துத்தெரிவித்த மொறோக்கோவின் ஆறு உயரதிகாரிகளில் ஒருவர் ஐரோப்பாவிலே தாக்குதலை மேற்கொள்வதற்காகத் தயார்படுத்த, அல்கொய்டாவின் குகைகள் பல மொறோக்கோவிலே இருப்பதாகத் தெரிவித்தார். அல்கொய்டாத் தீவிரவாதிகளின் முகாம்களில் மொறோக்கோ இளைஞர்கள், யுவதிகள் பயிற்சிபெற்றதை உறுதிப்படுத்தமுடியாதுள்ளதாகவும் ஆனால், இது தொடர்பாக மொறோக்கோ அரசினால் தமக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஸ்பெயின் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவது குறித்து அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் பணிப்பு!

(கொழும்பு)

பலாலிப் பகுதியை உள்ளடக்கிய வலி. வடக்குப் பிரதேசத்தில் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் பகுதியில், மக்கள் மீளக்குடியமர்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த அறிக்கையை அடுத்த மாதம் 6 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான மூன்று நீதியரசர்கள் குழு உத்தரவிட்டது.

பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துமாறு கோரி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உள்ளிட்ட மூன்றுபேர் தாக்கல்செய்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இங்கு பாடசாலைகள் திறக்கப்பட்டு போக்குவரத்துச் சேவைகள் நடைபெறுவதால் மக்கள் குடியமர்வதில் சிக்கல் இல்லையென மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வாதிட்டார்.

## கிண்ணியா முஸ்லிம்களுடன் விடுதலைப் புலிகள் சந்திப்பு!

திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலகத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமையில் விடுதலைப் புலிகளுக்கும், கிண்ணியா பிரதேச உலமா சபையினருக்குமிடையில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதில் ஜீவனோபாயத் தொழிலை முஸ்லிம்கள் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் எவ்வித தடையும் விதிக்கவில்லை என்றும், ஆனால் காடுகளில் பச்சை மரங்கள் வெட்டுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

பட்ட மரங்களை எடுத்துச் செல்வதில் எவ்வித பிரச்சினையும் இல்லையெனவும், ஆனால் பச்சை மரங்களைத் தறித்தால் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டிவரும் எனவும் புலிகள் தெரிவித்தனர்.

பாதுகாப்புத் தொடர்பில் புலிகளால் முஸ்லிம்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும் வரமாட்டாது. மீள் குடியேற்றம் செய்வதில் எமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. முஸ்லிம்கள் தமது பிரதேசங்களில் மீளக்குடியேறலாம். ஆனால், எமது முகாம்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் மீளக்குடியேற முடியாது.

குரங்குபாஞ்சான் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைக்கு அனுமதிப்பதெனில், தலைமைப்பீடத்துடன் கதைத்த பின்னரே அது குறித்த முடிவு தெரிவிக்கப்படும். எமது முகாம்கள் இல்லாத பிரதேசங்களில் முஸ்லிம்கள் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு எவ்வித தடையும இல்லையெனப் புலிகள் தெரிவித்தனர்.

அத்துடன் இனிவரும் காலங்களில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுமாக இருந்தால் உடனடியாக தம்முடன் தொடர்புகொண்டு பிரச்சினைகளை பேசித்தீர்க்கலாம் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் - மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தலைமையில் மூதூர் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தங்கன், வனவள பிரிவுப் பொறுப்பாளர் தமிழரசன மற்றும் மொழிவாணன் ஆகியோரும், முஸ்லிம்கள் தரப்பில் - திருமலை மாவட்ட முஸ்லிம்களின் உலமா சபையின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (04,10)

## கொக்கட்டிச்சோலையில் புலிகள் தேடுதல் வேட்டை!

மட்டக்களப்பு - கொக்கட்டிச் சோலையின் சில சந்தேகத்திற்குரிய பகுதிகளில் கடந்த சனிக்கிழமை தமிழீழக் காவல்துறையினர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவடி முன்மாரிச் கோட்டப் படையணிப் போராளிகளும் இணைந்து திடீர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

மக்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு, குற்றச்செயல்கள் நடைபெறாமல் தடுக்கும் வகையில் நடத்தப்பட்ட இத்தேடுதலின் போது வீடுவீடாகச் சென்ற தமிழீழக் காவற்துறையினர் மற்றும் போராளிகளால் கருத்துரைகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை, இத்தேடுதல் நடவடிக்கையின் போது சில முக்கிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இரகசிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தமிழீழக் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கையை தமிழீழக் காவல்துறையின் மட்டு-அம்பாறை மாவட்ட கண்காணிப்பாளர் ச.தமிழரசன், மாவடி முன்மாரிக் கோட்ட தளபதி ரமணன் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் துணைத் தளபதி யோகராஜ், மட்டு அம்பாறை காவல் பணிமனைப் பொறுப்பாளர் அஜந்தன் ஆகியோர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆரையம்பதியில் நேற்றிரவு இளைஞர் சுடப்பட்டு காயம்!

மட்டக்களப்பு ஆரையம்பதியில் நேற்றிரவு 8.15 மணியளவில் இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஆரையம்பதியில் வசிக்கும் சடசஞ்சரலிங்கம் கமலதாசன் (வயது 26) என்பவரே காலில் படுகாயமடைந்தவராவார்.

இனந்தெரியாத சிலர் மேற்படி இளைஞரின் வீட்டிற்குச் சென்று இவரை அழைத்து துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பியோடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## லயனல் பலகல்ல ஜெனரலாக பதவி உயர்வு

முன்னாள் இராணுவத் தளபதியான லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல ஓய்வுபெற்ற பின்னர் நான்கு நட்சத்திர ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சரும் முப்படைகளின் தளபதியுமான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே பதவி உயர்வுக்கான விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருக்கிறார்.

இராணுவத் தளபதியாகவும் கூட்டு நடவடிக்கைத் தளபதியாகவும் இருந்த ஜெனரல் லயனல் பலகல்ல கடந்த ஜூன் 30 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## உயிரிழந்தவர்களின் சடலங்கள் கொழும்பு வைத்திய சாலையில்!

அத்துருகிரிய - கொட்டாவ பகுதியில் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் உட்பட எட்டுப் பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சம்பவம் இடம்பெற்ற கொட்டாவாவில் உள்ள வீட்டுக்கு சென்றிருந்த அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் நேற்று விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதேவேளை, சுட்டுக் கொல்லப்பட்ட எட்டுப் பேரினுடைய சடலங்கள் கொழும்பு நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரியிடம் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டன.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தின் உத்தரவு கிடைக்காமல் விசாரணைகளை நடத்த முடியாதெனவும் சட்ட வைத்திய அதிகாரி அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை சம்பவம் நடைபெற்ற வீட்டிற்கு பெருமளவு பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## மிதிவெடி வெடித்து 3 சிறுவர்கள் காயம்!

மட்டக்களப்பு - புலிபாய்ந்தகல் பகுதியில் மிதிவெடி வெடித்து மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்தனர்.

நேற்று நடந்த இந்தச் சம்பவத்தில் புலிபாய்ந்த கல்லைச் சேர்ந்தவர்களான ரவிச்சந்திரன் நிவேதா (வயது 8), ஆறுமுகம் வினிதா (வயது 8), ஆறுமுகம் கோகுலன் (வயது 12) ஆகிய மூன்று சிறுவர்களுமே முகத்திலும் காலிலும் படுகாயமடைந்தவர்களாவர்.

குளமொன்றில் குளிக்கச் சென்ற இவர்கள் அப்பகுதியில் காணப்பட்ட பொருளொன்றை எடுத்து மரமொன்றின் மீது வீசியவேளை அது வெடித்துச் சிதறியபோதே இவர்கள் காயமடைந்தனர்.

இம்மூவரும் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

### போர் நிறுத்தம்...

புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் விரிவாக விளக்கியுள்ளோம்.

இந்த விடயங்கள் குறித்து இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதால் இவை குறித்து விரிவாகக் கூறவிரும்பவில்லை.

சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் சமாதான நடவடிக்கைகளும், போர்நிறுத்த உடன்படிக்கையும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தற்போது, போர்நிறுத்த உடன்படிக்கையை பலவீனப்படுத்தும் வகையில் இடம்பெறும் சம்பவங்கள் பாரதூரமானவையாகும்.

இதேவேளை - சில ஸ்திரமற்ற தன்மைகளும் காணப்படுவதால், அவற்றை சாதகமாக இருதரப்பினரும் அணுகாவிட்டால் சிறிய சம்பவங்கள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

தமிழ்ச்செல்வனுடனான பேச்சுவார்த்தையில்- நாட்டின் பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் பற்றிப் பேசியுள்ளேன். கொட்டாவவில் இடம்பெற்ற கொலைச் சம்ப வங்கள் பற்றியும் பேசப்பட்டது. இந்தச் சம்பவம் பற்றி போதிய ஆதாரங்கள் நிலைநாட்டப்படும்வரை சரியான தகவல்களைக் கூறமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

### மட்டக்களப்பு...

அதேயிடத்தைச் சேர்ந்த பூபாலபிள்ளை தவமலர் (வயது 30), இராசதுரை ஜெயந்திரன் ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### இடைக்கால நிர்வாகசபை...

இவர்களைத் தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் வரவேற்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்திற்கு அழைத்துச சென்றார்.

அங்கு காலை 10.45 மணியளவில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவுடன் பேச்சுக்கள் ஆரம்பமாகின. இந்தப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளின் தரப்பில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் பங்கு பற்றினர்.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாகத் தோன்றியுள்ள ஆயுதக்குழுக்கள் தான் போர் நிறுத்த உடன்பாட்டை கேள்விக் குறியாக்கியுள்ளன என்பதையும், விடுதலைப் புலிகள் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனிடம் எடுத்துக் கூறியதாகவும் தெரியவருகிறது.

### கொட்டாவ...

சாதகமாக இல்லை.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் திடசங்கற்பம் கொண்டுள்ளது. பயங்கரவாத அட்டூழியங்களுக்கு எதிராக, சர்வதேச நடைமுறைகளுக்கு ஒத்ததாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் எதுவுமில்லை....

விடயங்கள் குறித்துப் பேசப்பட்டது.

எங்களைப் பொறுத்தவரையில் அரசிடம் இருந்து அவர்கள் எந்தவித தகவலையும் கொண்டுவரவில்லை. ஏற்கனவே எமது தேசியத் தலைவரை நோர்வே வெளிவிவகார அமைச்சர் சந்தித்தபோது - நாங்கள் முன்வைத்த நிலைப்பாடுகளில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை.

இந்த நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாகவும், தெளிவாகவும் இருக்கின்றோம் என்று மீண்டும் நாங்கள் வலியுறுத்திக் தெளிவாகக் கூறியிருக்கிறோம்.

ஆகவே, அவர்கள் அரசுதரப்போடு பேசிய பின்புதான் - இது சம்பந்தமாக அரசின் நிலைப்பாட்டை அறிந்த பின்னர்தான் அவர்கள் தங்களுடைய நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில் வெளிப்பார்வை மட்டுமல்ல, சமாதான முயற்சிகளிப் முன்னேற்றம் இல்லை என்பதுதான் உண்மையானதும், உறுதியானதுமாகும்.

அவற்றை நாங்கள் தெளிவாகக் முன்வைத்திருக்கிறோம். இரண்டாவது வருடமாக எங்களுடைய மக்கள் இந்த சமாதான முயற்சிகளில் முழுமையாக ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள், நம்பிக்கையீனமும் அடைந்திருக்கிறார்கள் என்பதை இன்று வலியுறுத்தி தெளிவாக்கி இருக்கிறோம்.

ஜனாதிபதி முழு அர்ப்பணிப்போடும், நேர்மையுடனும் தன்னுடைய நிலைப்பாட்டை முன்வைத்துக்கொண்டு பேச்சுக்களுக்கு வருவதுதான் பொருத்தமானது.

ஏனெனில் ஆட்சிப்பீடத்தில் இருக்கின்ற அமைச்சர்கள், அவர்களுடைய பங்காளிக் கட்சிகள் மட்டத்திலே இந்தச் சமாதானத்துக்கு விரோதமான கருத்துக்களைத்தான் வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றன. ஜனாதிபதி அவ்வப்போது தமது நிலைப்பாட்டினை நேரத்துக்கு நேரம் மாற்றிக்கொண்டு வருகின்ற சூழ்நிலையையும் நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

அனுசரணையாளருக்கும், சர்வதேச சமூகத்துக்கும் எங்களுடைய நிலைப்பாட்டை தெளிவாக்கவேண்டிய கட்டாயம் எங்களுக்கு இருக்கின்றது.

ஆகவே அவற்றை நாங்கள் தெளிவாக்கி இருக்கின்றோம். எதிர்காலத்தில் ஏற்படும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப எங்கள் தலைமைப்பீடம் தீர்க்கமான முடிவை எடுக்கும் என்றும் நம்புகின்றோம்.

யுத்திநிறுத்த உடன்படிக்கையைப் பொறுத்தவரையில் அது தற்போது நடைமுறையில் இருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாகத் தோன்றியுள்ள ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் தான் யுத்தநிறுத்த உடன்படிக்கையை கேலிக்குரியதாக்கி நிற்கின்றது என்பதை நாங்கள் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் கூறியிருக்கின்றோம். துணை வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினருக்கும் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

ஆயுதக்குழுவாக தேசவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் மத்தியில் மோதல்கள் உருவாகின்றது. அதனுடைய வெளிப்பாடாக நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தைப் பார்க்கலாம்.

அவர்கள் மத்தியில் முரண்பாடுகள் தோன்றி மோதல்கள் ஏற்பட்டுள்ளன. இப்படியான ஒரு சூழ்நிலை அவர்களுக்குள்ளே உருவாகியிருக்கிறது என்பதை இன்று நாம் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

படைத்தரப்பின் ஆதரவில்லாமல் கிழக்கில் குழுக்கள் செயற்படுவது கஷ்டமான காரியம். எனவே கடந்த இரண்டரை வருட காலப் பகுதிக்குள் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால்தான் யுத்தநிறுத்த உடன்படிககை செம்மையாக நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருந்தது.

அண்மைக்காலத்தில் புதிதாகத் தோன்றியுள்ள இந்த ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகள் நிச்சயமாக படைத்தரப்பின் ஆதரவோடுதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறன.

இந்த நடவடிக்கைகள் அங்கு ஓர் சுமுகநிலையை சீர்குலைத்து யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கேள்விக்குறியாக்கி நிற்கின்றது. ஆகவே படைத்தரப்பினர் வழங்கும் ஆதரவுப்போக்கை மாற்றியமைக்க வேண்டும்.

விரைவில் இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டுமென்று படைத்தரப்புக்கும் அரசாங்கத்திற்கும் அனுசரணையாளர்களுக்கும் வலியுறுத்தி வருகின்றோம்.

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் இதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான தீவிர கரிசனையைக் கொண்டிருக்கிறோம். அத்துடன் இது சம்பந்தமான பல நடவடிக்கைகளை முடக்கி விடப்பட்டிருக்கிறது என்றுதான் நான் நம்புகின்றேன்.

மக்களுடைய சந்தேகங்களும் அவர்களது நிலைப்பாடும் சரியானது. ஏனெனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையைப் பொறுத்தவரையில் எமது மக்களுடைய அபிலாஷையைப் பிரதிபலிககின்ற அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைப்பாகவே எமது விடுதலை அமைப்பு இருக்கின்றது.

அந்த வகையில் மக்களின் நிலைப்பாடுகளை முழுமையாக ஏற்றுக்கொள்கின்றோம். மக்களின் நம்பிக்கையீனம், விரக்தி சம்பந்தமாக அனுசரணையாளர் ஊடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

ஆகவே எதிர்காலத்தில் ஒரு அபூர்வமான முடிவுகளை எமது தலைமைப்பீடம் எடுக்குமென்று நான் நம்புகின்றேன்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் விட்டுக்கொடுப்புக்கள் என்ற சொற்பதம் பொருத்தமானதாக நாங்கள் நினைக்கவில்லை. ஏனென்றால் விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுப்பதற்கு ஒன்றுமில்லை.

எங்களுடைய மக்களின் உரிமைக்காக, அபிலாஷைக்காக விடுதலைப் புலிகள் அமைப்பு நீண்ட பல வருடங்களாகப் போராடிவருகிறது.

அந்த அடிப்படையில் எமது மக்களின் அபிலாஷைகளை அவர்களது நிலைப்பாட்டினை முன்வைப்பதில் நாங்கள் எந்த விட்டுக்கொடுப்பையும் செய்யமுடியாது.

ஆகவே எங்கள் மக்களின் நிலைப்பாட்டை தெளிவாக தொடர்ந்தும் வலியுறுத்திவருவோம் என்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.